Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 21 செவ்வாய்க்கிழமை (06.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :284

★ பொதுக்கட்டமைப்பு ஒரேயடியாகக் கைவிடப்படும்

★ இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சே இனி இல்லை

★ ஒற்றையாட்சி முறையின் கீழ்தான் எந்தத் தீர்வும்

★ யுத்தநிறுத்த ஒப்பந்தம் மாற்றி அமைக்கப்படும்

★ நோர்வேப் பங்களிப்பு மீள்பரிசீலனை செய்யப்படும்

★ ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும்

# ஜே.வி.பியின் 12 நிபந்தனைகளுக்கு

# அடிபணிந்தார் மஹிந்த ராஜபக்ஷ!

## தமிழரின் நலன்களுக்கு எதிரானவற்றை ஏற்றுக்கொண்டு இணங்கினார் பிரதமர்

கொழும்பு, செப்ரெம்பர். 06

தமிழர்களின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் முக்கிய அடிப்படை அம்சங்கள் பல உள்ளடங்கலாக, ஜே.வி.பி. முன்வைத்த பன்னிரண்டு அம்ச நிபந்தனைகளுக்கு இணங்கினார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. இந்த இணக்கத்தின்படி, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. ஆதரவுடன் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷ அத்தேர்தலில் வெற்றிபெற்றால்-

★ பொதுக்கட்டமைப்புத் திட்டம் ஒரேயடியாகக் கைவிடப்படும்.

★ இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சுக்கு இனிமேல் இடமேயில்லை.

★ எந்தத் தீர்வு முயற்சியும் ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ்தான் அமையும்.

★ தற்போதைய யுத்தநிறுத்த ஒப்பந்தம் மாற்றி அமைக்கப்படும்.

★ அமைதி முயற்சிகளில் நோர்வேயின் அனுசரணைப் பணி மீளாய்வு செய்யப்படும்.

★ தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை, புதிய ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் நிறைவு பெறுவதற்கு முன்னர் இல்லாதொழிக்கப்படும்.

இவற்றுக்கெல்லாம் மஹிந்த ராஜபக்ஷ இணங்கிவிட்டார் என ஜே.வி.பி. நேற்று அறிவித்தது. (2 ஆம் பக்கம் பார்க்க)

'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் விவகாரம்

## மஹிந்த மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு?

### 10 நாள்களில் கதையை முடிக்க சந்திரிகா திட்டம்

கொழும்பு, செப்.6

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளராகப் போட்டியிடத் தயாராகி வரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் முயற்சிகளுக்கு ஆப்பு வைக்கும் நடவடிக்கைகள் தயாராகிவிட்டன என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீதான 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து உடனடியாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவும், பத்து நாள்களுக்குள் அந்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையைப் பெற்று நடவடிக்கை எடுக்கவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தேசித்திருக்கிறார் எனத் தெரியவந்தது.

தனக்கு வேண்டிய - நெருக்கமான - தனிப்பட்ட ஆள்களைக் கொண்ட 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' என்ற நிதியத்துக்கு, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண உதவியாகத் தனது பிரதமர் அலுவலகக் கணக்குக்கு வந்த நிதியை மாற்றியதன் மூலம் ஊழல் புரிந்தார்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் - ஜே.வி.பி. புரிந்துணர்வு ஒப்பந்தம் வியாழனன்று கைச்சாத்து

கொழும்பு, செப்.6

ஜனாதிபதித் தேர்தலையொட்டிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் பிரதமரும் ஜே.வி.பியினரும் எதிர்வரும் வியாழக்கிழமை கைச்சாத்திடவுள்ளனர் என்று தெரியவருகிறது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு,செப்.6

திருகோணமலையில் பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் மூன்று கிரனேட்டுக்களும், ரி-56ரக துப்பாக்கியொன்றும் அதற்குறிய இரண்டு மக

(18 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 3 இளைஞர்கள் கைது; காயமடைந்த சிப்பாய் நேற்று மரணம்

மட்டக்களப்பில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது மூன்று தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேசமயம் சித்தாண்டியில் ஓட்டோவில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்ற இராணுவச் சிப்பாய் நேற்று பொலன்னறுவை வைத்தியசாலையில் மரணமானார். அனுருத்த குமார என்ற சிப்பாயே உயிரிழந்தவராவார்.

இதேவேளை, கிழக்கில் ஆங்காங்கே அதிகரித்துவரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கென அங்கு மேலதிக படைகளை அனுப்பி வைக்க இராணுவத் தலைமையகம் முடிவு செய்துள்ளது.

நேற்றுமுன்தினம் பரவலாக இடம்பெற்ற வன்முறைகளை அடுத்து மட்டக்களப்பு அரசடிச் சந்தியில் வைத்து மூன்று தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரையும் பொலீஸாரையும் இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகவும் புலிகளே இந்த வன்முறைகளுக்குக் காரணம் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்நாயக்க தெரிவித்தார்.

## ஐ.நா. செயலரின் பிரதிநிதியுடன் ஜே.வி.பி. இன்று முக்கிய பேச்சு

### நோர்வேயை ஓரங்கட்டுவது பற்றியும்

கொழும்பு, செப். 6

இலங்கை அமைதி முயற்சிகளில் அனுசரணையாளர்களாகச் செயற்படும் நோர்வேத் தரப்பினரை அப்பணியிலிருந்து நீக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும், ஐ.நா. அமைதிப்படையை நாட்டுக்குள் அழைத்து வர மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பாகவும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியுடன் முக்கிய பேச்சுகளை ஜே.வி.பி. இன்று நடத்தவுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.பியின் தலைமைச் செயலர் ரில்வின் சில்வா கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட ரில்வின் சில்வா, மேலும் கூறியதாவது:-

நோர்வே அனுசரணையாளர்கள் மீது கொண்டுள்ள அதிருப்தியின் காரணமாகவே அவர்களை அனுசரணைப் பணியில் இருந்து மாற்றுவது தொடர்பாகக் கருத்துக்கள் வெளியாகின்றன.

(18 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் 141 பைந் இரத்தம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

நல்லூர் ஆலய பெருந்திருவிழா நாள்களின்போது யாழ். ஆஸ்பத்திரியின் இரத்த வங்கிப் பிரிவினால் நடத்தப்பட்ட நடமாடும் இரத்த வங்கிச் சேவையின் மூலம் மொத்தம் 141 பைந் இரத்தம் யாழ். ஆஸ்பத்திரிக்கு கிடைத்துள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியின் இரத்த வங்கிப் பிரிவினால் நல்லூர் ஆலயச் சூழலில் இரத்த வங். கிப் பிரிவு அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டு இரத்தம் சேகரிக்கும் பணிநடைபெற்று வந்தது.

இந்த இரத்த வங்கிப் பிரிவில் ஆலயத்திற்கு வந்த அடியார்கள் பலரும் இரத்த தானத்தை வழங்கினர்.

இதன் போது 141 பைந் இரத்தம் இரத்த வங்கிப் பிரிவுக்கு கிடைத்துள்ளதாக இரத்த வங்கிப் பிரிவின் பொறுப்பதிகாரி டாக்டர். சிவசங்கர் தெரிவித்தார்.

இந்த இரத்த சேகரிப்புப் பணிக்கு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் ஆகியோர் அனுசரணையாகச்செயற்பட்டனர்.(ஐ-7-15)

# நல்லூர் ஆலயச் சூழலில் 3 மோ. சைக்கிள்கள் திருட்டு

யாழ்ப்பாணம்,செப்.6

நல்லூர் ஆலயபெருந்திருவிழா நாள்களின் போது ஆலயத்திற்கு வந்தவர்களின் மூன்று மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன என்று யாழ். பொலீஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

ஆலயத்திற்கு சமீபமாகவுள்ள அரசடிப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதே இந்த மூன்று மோட்டார் சைக்கிள்களும் திருடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டிருக்கின்றது.

குருநகரைச் சேர்ந்த அ. இக்கினேசியஸ் கலன் என்பருடைய மோட்டார் சைக்கிளும்-

கல்வியங்காட்டைச் சேர்ந்த ச. சேகர் என்பவருடைய மோட்டார் சைக்கிளும் -

ரயில்வே வீதி கொக்குவிலைச் சேர்ந்த செ. செல்வரஞ்சன் என்பவருடைய மோட்டார் சைக்கிளுமே திருடப்பட்டுள்ளன.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களை மீட்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக யாழ். பொலீஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-7)

# பிக்குவுக்கான நிவாரணம் பெண்களின் உள்ளாடைகள்

## இதுதான் 'ஹெல்பிங் அம்பாந்தோட்டையா' என ஐ.தே.க. கேள்வி

பௌத்த பிக்கு ஒருவருக்கு ஆழிப்பேரலை நிவாரணமாக வழங்கப்பட்ட பொதியில் பெண்களின் உள்ளாடைகளும், கவுன்களுமே காணப்பட்டன. இதுதான் பிரதமரின் 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை?' என்று நையாண்டி செய்கிறது ஐக்கிய தேசியக்கட்சி. பௌத்த பிக்குவுக்குக் கிடைத்த பெண்களின் ஆடைகளையும் செய்தியாளர்களிடம் தூக்கிக் காட்டினார் ஐ.தே.கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மனோ விஜேரத்ன.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே இதனை அவர் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை எப்படித்தமிழ், சிங்கள, இஸ்லாமிய சமூகத்தவர்களை ஐக்கியப்பட வைத்ததோ, அதேபோன்று ஆழிப்பேரலை நிவாரணத்தில் மோசடி செய்த பிரதமரின் தோல்விக்காகவும் அவர்கள் ஐக்கியத்துடன் செயல்பட ஆரம்பித்துவிட்டனர் என்றும் மனோ எம்.பி. கூறினார். இதுகுறித்து அவர்மேலும்தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலை நிவாரணத்திட்டத்தில் அரசு எந்த ஒரு கொள்கையும் கடைப்பிடிக்கவில்லை. அதற்கு அரசிடம் உறுதியான திட்டங்கள் எதுவும் இல்லை. மோசடிகளும் முறைகேடுகளுமே மலிந்து கிடக்கின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களும் உரிய முறையில் விநியோகிக்கப்படவில்லை. கரையோரப் பகுதியில் பாதிக்கப்பட்ட பௌத்த பிக்கு ஒருவருக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதியில் பெண்கள் அணியும் இந்த ஆடைகள்தான் இருந்தன. இது அந்த பௌத்த பிக்குவை மட்டும் அல்ல பௌத்த மதத்தையே அவமானப்படுத்திய செயலாகும்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பையும், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஆலோசனையையும் கைவிட்டு ஜே.வி.பியினருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் பிரதமர் கைச்சாத்திடவுள்ளார். இது ஒட்டு மொத்த தமிழ், முஸ்லிம் மக்களிடையேயும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது-என்றார். (ஐ-க)

# காற்றுடன் கூடிய கடும் மழையால் மலையகத்தில் மண் சரிவு; ஐவர் பலி!

கொழும்பு, செப்.6

மலையகத்தில் ஆங்காங்கே ஏற்பட்ட மண்சரிவுகளில் அகப்பட்டு இதுவரை ஐவர் பலியாகியுள்ளனர். மேலும் பல பகுதிகளில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. இரத்தினபுரி, காலி, களுத்துறை போன்ற பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பல நூற்றுக் கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். களு கங்கையில் நீர்மட்டம் 22 அடியாக உயர்ந்துள்ளது.

கடந்த சில தினங்களாக மலையகம் மற்றும் தென்பகுதிகளில் பெரும் காற்றுடன் கடும் மழைபெய்து வருகின்றது. இதனால் மலையகப் பகுதிகளில் மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

பலாங்கொடை, ராசகல என்ற இடத்தில் உள்ள தேயிலைத் தொழிற்சாலைக்கு அருகில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹட்டன், அபோட்ஸ்லி தோட்டத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட மற்றொரு மண்சரிவில் சிக்கி ராமையா அஞ்சலிமேரி என்ற பெண்ணொருவர் உயிரிழந்தார். மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

காலி, நாகொடை, பத்தேகம, நுவரெலியா, இரத்தினபுரி, களுத்துறை, பலாங்கொடை, ஹட்டன், தலவாக்கலை, டயகம போன்ற பகுதிகளிலும் கடும்காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது. இரத்தினபுரியில் நூற்றுக் கணக்கானோர் வீடுகளைவிட்டு வெளியேறி உள்ளனர். அப்பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் மாலனி பிரேமரத்ன கூறினார்.

தாழ்ந்த நிலப்பகுதிகளில் வசிப்பவர்களை அப்பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டன.

மலையகத்தில் ஆறுகளும், நீரோடைகளும் பெருக்கெடுத்திருப்பதால் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள மரக்கறித் தோட்டங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பெரும்பாலான இடங்களில் மரங்கள் முறிந்து வீதிகளில் சாய்ந்துள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால், போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

பாலாங்கொடை, இரத்தினபுரி மற்றும் மலையகத்தின் மத்திய பகுதிகளில் மண்சரிவு அபாயம் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பிருப்பதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. அப்பகுதி மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

களுத்துறைப் பகுதியில் பிரதான வீதிகள் சில வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்தும் இந்தக் காலநிலை நீடிக்குமானால் மேலும் அபாயங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கின்றன என காலநிலை அவதானிப்பு நிலையம் எச்சரித்துள்ளது.

களுகங்கை ஆறு பெருக்கெடுத்திருப்பதால் அதை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களும் வெளியேறி வருகின்றனர். பத்தேகம பகுதியில் உள்ள ஹீல என்ற ஆறு பெருக்கெடுத்திருப்பதால் அப்பகுதியில் வசிப்பவர்கள் களுத்துறைப் பகுதிக்கு வரமுடியாமல் இருக்கின்றனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-க)

# அராலிக் கடலில் மீனவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் செப்.6

கடலில் வலைவீசி மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை அராலி கடற்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

அராலி கிழக்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையாகிய கந்தசாமி - பிரகலநாதன் (வயது-41) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் நேற்றுக் காலை வழமை போன்று அராலி கடற்பகுதியில் வீச்சு வலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது திடீரென கடலில் வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-7-ரி)

# ஜே.வி.பியின் 12 நிபந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இலங்கை நூலக சேவைகள் மன்றக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்தே, இந்த விவகாரங்களுக்குப் பிரதமர் இணங்கியமை பற்றிய அறிவிப்பு விடுக்கப்பட்டது.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மற்றும் எம்.பிக்களான ரில்வின் சில்வா, விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக, அனுர குமார திஸநாயக்க உட்படப் பல பிரமுகர்கள் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

'2005 - ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மக்கள் விடுதலை முன்னணிக்கு (ஜே.வி.பிக்கு) இடையில் செய்து கொள்ளப் பட்டுள்ள கொள்கை ரீதியிலான இணக்கப்பாடு' - என்ற தலைப்பிலான ஆவணம் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்டது. அந்த ஆவணத்திலேயே மேற்படி அம்சங்களுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த ஆவணத்தின்படி இணக்கம் காணப் பட்ட பன்னிரண்டு அம்சங்களும் வருமாறு:-

❋நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளதும், இந்நாட்டு மக்களின் பாரிய விமர்சனங்களுக்கு இலக்காகியுள்ளதுமான அரசு - தமிழீழ விடுதலைப்புலிகள் இடையில் 2005 ஜுன் 24ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஆழிப்பேரலை நிவாரண சபையை ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதனால், அதனை செயற்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுதல். அதேவேளை, அனர்த்தத் துக்குள்ளான அனைத்து மக்களுக்கும் நிவாரணம் வழங்குவதை அத்தியாவசிய பணியாகக் கருதி, நிவாரணத்தைத் துரிதப்படுத்தல். தற்போது அரசாங்கம் பின்பற்றிவரும் வேலைத் திட்டம் தொடர்பாக மீள்பரிசீலனைக்குட்படுத்தி அதில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய செயற்றிட்டம் ஒன்றைத் தயார் செய்து அரசாங்கத்தின் தலைமையில் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு இணக்கம் காணப்படுகின்றது.

❋இலங்கை தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்திக்கொள்ளும் முகமாக தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் மற்றும் இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, நிரந்தரமான தீர்வுக்குஇணக்கமின்றி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அல்லது அதற்குச் சமமான நிர்வாக முறையொன்றைப் புலிகள் அமைப்புக்கு வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு புலிகளுடன் பேச்சுகள் நடத்தாதிருக்கவும் இணக்கம் காணப்படுகின்றது.

❋இலங்கையின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முன்வைக்கப்படும் எவ்வகையான தீர்வின் போதும் இலங்கையின் ஒற்றையாட்சி முறையைப் பாதுகாப்பதற்கு இணக்கம் காணப்படுகின்றது.

❋அன்றைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்காவுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் 2002 பெப்ரவரி 22ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட, நாட்டுக்குப் பாதகமான போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் நிலைமையைக் கருத்திற்கொண்டு, அதில் தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிப்பதும், பிரிவினைவாதத்தை ஆதரிக்கின்றதும், அரசமைப்புக்கு முரணானதுமான சரத்துகளை முற்றாக நீக்கி ஒப்பந்தத்தை மீளமைப்பதற்கு இணக்கம் காணப்படுகின்றது.

❋இலங்கை அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கும் போதும், போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணியின் போதும் நோர்வேயின் நடவடிக்கைகள் புலிகளுக்கு ஆதரவானவையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும் தமது பணியின்போது பக்கச்சார்பின்மை விடயத்தில் நோர்வே தோல்வி கண்டுள்ளதாலும் தொடர்ந்தும் அவர்களை அப்பணியில் ஈடுபடுத்துவது தொடர்பாக மீள்பரிசீலனை செய்வதா என்பதை தீவிர கவனத்தில் கொண்டு தேவையான முடிவுகளை மேற்கொள்ள இணக்கம் காணப்படுகின்றது.

❋வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பயங்கரவாத நடவடிக்கைகளால் சீர்குலைந்திருக்கும் ஜனநாயகம், சட்டம், அமைதி, மனித உரிமைகள் போன்றவற்றை மீளக் கட்டியெழுப்புதலை முதன்மைப் பணியாகக் கருதுவதுடன் அனைத்து ஜனநாயக அரசியல் கட்சிகளும் தத்தமது அரசியல் பணிகளை தடையின்றி முன்னெடுப்பதற்கும், வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் எவ்வித அச்சமும், பீதியுமின்றி வாழ்வதற்கான சூழலை உருவாக்கவும் மற்றும் ஜனநாயக அடிப்படையிலான பல கட்சிமுறை அரசியலை உறுதிப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்படுகின்றது.

❋இலங்கையின் ஜனநாயகச் செயற்பாடுகளுக்குப் பாரியளவில் பாதிப்பான நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதை பிரதானமானதும், முதன்மையானதுமான பணியாகக் கருதி 2005இல் ஆரம்பமாகும் 6 ஆவது ஜனாதிபதிப் பதவியின் ஆயுட்காலம் முடிவடையும் முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கும் இணக்கம் காணப்படுகின்றது.

❋இலங்கையின் பொருளாதாரத் தந்திரோபாயமாக புதிய தாராளமய, போலி திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாததுடன், சக்திமிகு தேசிய பொருளாதாரக் கொள்கையைக் கட்டியெழுப்பும் நோக்குடன் தெளிவான பொருளாதாரக் கொள்கையை முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்படுகின்றது.

❋இலங்கையின் தேசிய பொருளாதாரத்தின் கேந்திர நிலையங்களாகக் கருதப்படும் மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், துறைமுகம், விமான நிலையம், வங்கி உள்ளிட்ட அரச நிறுவனங்கள் மற்றும் நீர்வளம் உள்ளிட்ட இயற்கை வளங்களை தனியார்மயமாக்குவதை தவிர்ப்பதற்கு இணங்குவதுடன் மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் மற்றும் வளங்களை தனியார் மயமாக்கல் திசையை நோக்கி கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் அவற்றை ரத்துச் செய்யவும் இணக்கம் காணப்படுகின்றது.

❋1981இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கல்வி வெள்ளை அறிக்கை தொடக்கம் இலங்கையின் இலவசக் கல்வி முறையைத் தனியார் மயமாக்கலை நோக்கி நகர்த்த ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் அந்நடவடிக்கைகள் தொடர்பாக புத்திஜீவிகள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஒத்துழைப்புடன் விரிவாக ஆராய்ந்து அம்முடிவுகளை இரத்துச்செய்வதற்கும், இலவசக் கல்வி உரிமையை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதென இணக்கம் காணப்படுகின்றது.

❋நாட்டில் உற்பத்திப் பணியில் பெரும் பங்களிப்பு நல்கிவரும் தொழிலாளர், விவசாயிகள் உள்ளிட்ட உழைக்கும் மக்கள், தொழிற்சாலை உரிமையாளர் மற்றும் வர்த்தக சமூகத்தினர், அதிகரித்துச்செல்லும் வாழ்க்கைச் செலவினால் சிரமத்துக்குள்ளாகியிருக்கும் நுகர்வோர்கள் என்போர் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயற்பாடுகளின்போது மக்கள் விடுதலை முன்னணியின் யோசனைகளை ஏற்றுக்கொண்டு செயற்பட இணக்கம் காணப்படுகின்றது.

❋இலங்கை அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதுடன் குறிப்பாக தெற்காசியப் பிராந்திய நலன்கள் மற்றும் ஆசிய வலய ஒத்துழைப்பை கருத்தில் கொண்டு செயற்படவும் இணக்கம் காணப்படுகின்றது.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## விலகிப் போகும் சமயத்தில் கூட குழப்பத்தை விதைத்துச் செல்வதா?

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையை நேரடியாக இழுத்து விடுவதற்கு இலங்கை அரசுத் தரப்பு மட்டத்தில் எடுக்கப்படும் முயற்சிகள் குறித்து தெற்கில் செய்திகள் வெளியாகிய வண்ணம் உள்ளன. தமது பதவிக் காலத்தின் இறுதி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அந்தக் கடைசி நாள்களில் நாட்டின் மிக முக்கிய பிரச்சினை தொடர்பாக இத்தகைய அதிரடி மாற்றம் ஒன்றைச் செய்ய வேண்டுமா, அது நியாயமான நடவடிக்கையா என்று பல தரப்புகளிலும் கேள்வி எழுப்பப்படுகின்றது. அது குறித்து அதிருப்தியும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயை அப்பொறுப்பிலிருந்து ஓரம் கட்டிவிட்டு, அந்தப் பொறுப்பை ஐ.நா.விடம் ஒப்படைக்கவும், தற்போது யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியை வகிக்கும் ஸ்கண்டிநேவிய கண்காணிப்பாளர்களின் பணியை ஐ.நா. அமைதிப்படை ஒன்றிடம் ஒப்படைக்கவும் ஆலோசிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

நோர்வேயை வேண்டாம் என்று கூறி ஐ.நாவை அழைக்க முயற்சிப்பது 'இருமல் கிழவி வேண்டாம் என்று ஒதுக்கி தும்மல் கிழவியை அரவணைப்பது' போன்றதாகும்.

'ஆனை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது' - என்பார்கள். அது போன்றதுதான் ஐ.நா. புகுந்த நாடும். அதுவே அனுபவப் பாடம். அமைதிப்படை என்ற பெயரில் ஐ.நா. துருப்புகள் நுழைந்த எந்த நாட்டில் இலகுவாகத் தீர்வு கிட்டியது?

நோர்வேயும், நோர்வேயைச் சுற்றிய நான்கு, ஐந்து நாடுகளும் இப்போது இலங்கை இனப்பிரச்சினைக்கு அனுசரணைப் பணி வகிக்கின்றன. இதனை நூற்றியைம்பதற்கும் அதிக நாடுகளைக் கொண்ட ஐ.நா.சபையிடம் ஒப்படைத்தால் - அதனை இப்பிரச்சினைக்குள் இழுத்து வந்தால் - விளைவு என்னாகும்? ஐந்து பக்கங்களுக்கு - திசைகளுக்கு - இழுபட்ட விவகாரம் இனி நூற்றியைம்பது பக்கங்களுக்கும் அல்லவா இழுபடும்?

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட தரப்புகள் இரண்டு. ஒன்று சிங்களத் தரப்பு. அதனை இலங்கை அரசு பிரதிநிதித்துவப்படுத்துக்கின்றது. அடுத்தது தமிழர் தரப்பு. அதனைத் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரநிதித்துவப்படுகின்றனர். தவிரவும், பிரதேச வல்லாதிக்க நாடு என்ற முறையிலும் நெருங்கிய அயல்நாடு என்ற வகையிலும் இந்தியாவின் நலனும் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

இப்படிப் பல்வேறு தரப்புகளோடு தொடர்புபட்ட ஒரு விவகாரத்தில் - அத்தரப்புகளின் இணக்கமோ, இசைவோ பெறாமல், கருத்துக் கூடப் பெறாமல் - இந்த விடயத்துக்குள் ஐ.நாவை இழுத்து விடும் நடவடிக்கையை ஒருதலைப்பட்சமாக மேற்கொள்ள - அதுவும், அடுத்த பத்து வாரங்களுக்குள் அதிகாரத்தை விட்டு இறங்கப் போகும் இலங்கை அரசுத் தலைமை மேற்கொள்ள - முயற்சிப்பது, வேண்டுமென்றே இவ் விவகாரத்தைக் குழப்பிவிடும் எத்தனமாகவே கருதவேண்டும்.

தமது வலதுகையான வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதால் சீற்றமடைந்துள்ள ஜனாதிபதி குமாரதுங்க, அதற்காகப் புலிகளை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்ற ஆவேசத்தில் எதையாவது செய்துவிடத் துடிக்கிறார். அதன் ஓர் அம்சமாகவே ஐ.நாவை இவ்விடயத்துக்குள் இழுத்துவிடும் முயற்சியை நோக்கவேண்டும்.

ஐ.நாவை இந்த விடயத்துக்குள் புகுத்தினால் புலிகளின் நடவடிக்கைகளை எதிர்வரும் காலங்களில் 'மனித சமுதாயத்துக்கு எதிரான போர்க்குற்றங்கள்', 'சர்வதேச நீதிமன்ற விசாரணை' என்ற சிக்கல்களுக்குள் மாட்டவைக்கலாம் எனக் கனவு காண்கின்றார் போலும் ஜனாதிபதி குமாரதுங்க.

ஆனால், தனியான தாயகம், பாரம்பரியங்கள், பண்பாடுகள், தனித்துவமான மொழி, வாழிட நிலப்பரப்பு, வரலாறு என்பவற்றைக் கொண்டு தனித்துவ இனக் குழுமமாக விளங்கும் தமிழ் இனமும் அதன் தேசிய சுயநிர்ணய உரிமையும் ஐ.நா.மட்டத்தில் அங்கீகரிக்கப்படும் நிலைமை இதனால் இலகுவாக ஏற்படும் என்பதை அவர் நோக்கத் தவறிவிட்டார் என்றே கருதவேண்டும்.

சுயநிர்ணய உரிமைக்கான ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் பின்னால், சர்வதேச ரீதியில் ஏற்று அங்கீகரிக்கப்படக் கூடிய நீதி, நியாயங்கள் இருக்கின்றன. தவிரவும், முதலில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வுக்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத் தலைமை வகுத்திருக்கும் தந்திரோபாய அணுகுமுறை, அத்திசையில் தீர்வு முயற்சிகளை முன்னெடுக்க இலங்கை அரசுத் தலைமை போடும் முட்டுக்கட்டை போன்றவை இன்றைய நிலைமையில் ஈழத் தமிழருக்குச் சாதகமாகவே இப்பிரச்சினையை நோக்குவதற்கு ஐ.நாவை வழிப்படுத்தும்.

அத்தோடு, இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் அமைப்பு என்ற இரண்டு தரப்புகள் மட்டும் கொண்ட ஒரு பிரச்சினையில் ஐ.நா. நேரடியாகத் தலையிடுவது சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு சமனான ஓர் அந்தஸ்தை புலிகளுக்குப் பெற்றுக்கொடுப்பதாகவே இருக்கும் என்பதும் கவனிக்கத்தக்கது.

இப்படி இந்த முயற்சியில் விடுதலைப் புலிகளுக்கு சாதகமான பல அம்சங்களும் உள்ளன.

ஆனாலும், இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்புக்கு தலைமை வகிக்கப்போகும் பதவியில் ஒரு மாற்றம் விரைவில் வரவிருப்பது உறுதியாகியுள்ளதால், அத்தலைமைப் பொறுப்பை புதியவர் ஏற்று, தமக்கு இஷ்டப்பட்ட வழியில் தீர்வு முயற்சியை சுயாதீனமாக முன்னெடுக்க அவருக்கு இடமளிப்பதே பொருத்தமானது. அதற்கு முட்டுக்கட்டை போட்டு குழப்பம் செய்துவைக்கும் விதத்தில் முன்கூட்டியே காய்நகர்த்தல்களை மேற்கொள்வதற்கு பதவியை விட்டு விலகிப் போகும் அரசுத் தலைமை எத்தனிப்பது தவறானது; கண்டனத்துக்குரியது.

பதவியை விட்டு விலகிய பின்னரும் குழப்பத்தை நீடிக்க வைக்கும் கீழ்த்தரமான முயற்சியே இது.

# யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் மீளக்குடியமர்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்

## வலி.வடக்கு மக்கள் தனித்தனியாக கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,செப்.6

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி தமது வாழ்விடங்களில் மீளக்குடியமர ஏற்பாடு செய்யும்படி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரியுள்ளனர்.

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து தற்சமயம் மல்லாகம் நீதிவான் முகாமில் தங்கியுள்ள 70 பேர் நேற்றுக் கண்காணிப்புக் குழுவிடம் இது தொடர்பாகத் தனித்தனியாக மகஜர்களைச் சமர்ப்பித்தனர்.

'பொங்குதமிழ்' நிகழ்வின் ஓர் அங்கமாக மக்கள் முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டம் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் மீளக்குடியமர ஏற்பாடு செய்யுமாறு கோரி தொடர்ந்து கண்காணிப்புக் குழுவிடம் மகஜர்களைக் கையளிக்கவுள்ளனர்.

தனித்தனியே சமர்ப்பிக்கப்பட்டு வரும் இந்த மகஜரில் தமது விவரங்களை அவர்கள் விரிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மகஜரின் சாரம்சம் வருமாறு:-

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் வலி.வடக்கில் இராணுவம் புகுந்து மக்களை வெளியேற்றியது. தொழில் உபகரணங்கள் உட்பட சகல உடைமைகளையும் இழந்த நிலையில் நாம் இடம்பெயர்ந்து தற்சமயம் நலன்புரி நிலையங்களில் வாழ்கின்றோம்.

மனிதவாழ்வுக்கான அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கான மனித உரிமைகளை இழந்து வாழ்கின்றோம். மகிழ்ச்சிகரமாக கல்வியைப் பெறுவதற்கான உரிமையை எமது பிள்ளைகள் இழந்துவிட்டனர்.

சாதாரண வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பினும், முகாம் வாழ்க்கையில் அது சிறிய அளவில் கூட கிட்டவில்லை. சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக முகாம்களில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் நெருக்குவாரங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

போர் நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம், ஸ்ரீலங்காப் படையினர் தாம் ஆக்கிரமித்துள்ள நிலம், கடல் ஆகியவற்றிலிருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு நாம் கூடிய விரைவில் மீளக்குடியமர ஏற்பாடு செய்யுங்கள் - என்றுள்ளது. (எ-3)

## ஜனாதிபதித் தேர்தல் ஆரம்ப ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட அலுவலகம் ஆரம்பித்தது

யாழ்ப்பாணம்,செப்.6

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் நடத்துவதற்கான பணிகளை தேர்தல் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்களை உறுதிப்படுத்தல், தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள ஊழியர்களின் விவரங்களைத் திரட்டுதல் போன்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றவுள்ள பொலீஸ் மற்றும் ஊழியர்களிற்கான அறிவுறுத்தல் கூட்டங்களை நடத்துவதற்கும் அலுவலகம் ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது.

கடந்தவாரம் கொழும்பில் தேர்தல் ஆணையாளரால் ஜனாதிபதித் தேர்தல் பணிகள் குறித்து கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளரும் கலந்துகொண்டு தேர்தல் தொடர்பான விவரங்களை அறிந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-202-203)

## சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய தீவக உணவகம் மூடப்பட்டது

ஊர்காவற்றுறை, செப்.6

ஊர்காவற்றுறையில் சுகாதாரச் சீர்கேடான முறையில் செயற்பட்டு வந்த உணவகம் ஒன்று பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் உத்தரவுக்கு இணங்க மூடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை துறைமுக வீதியில் செயற்பட்டு வந்த உணவகமே இவ்வாறு மூடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

மேற்படி உணவகத்தில் தாம் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது அந்த உணவகம் உணவு கையாளும் நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகளைச் சீராகக் கடைப்பிடிக்காதது கண்டுபிடிக்கப்பட்டது என்றும் -

அவற்றை சீர்செய்யும்வரை குறித்த உணவகத்தை தற்காலிகமாக மூடுமாறு தாம் உத்தரவிட்டதாகவும்- ஊர்காவற்றுறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.கார்த்தீபன் தெரிவித்தார். (எ-16)

### உதயவாக்கு

கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்து விடமுடியாது.
–சுவாமி விவேகானந்தர்.

### நாளை

ஆவணி 22
புதன்கிழமை
07.09.2005
திதி: சதுர்த்தி
பின்னிரவு 04.23வரை
நட்சத்திரம்: சித்திரை
முன்னிரவு 11.47 வரை
சுபநேரம்: 04.34 - 06.04
ராகுகாலம்: 12.04 - 01.34
சித்தம், விநாயகர் சதுர்த்தி விரதம்
(யாவும் பழைய நேரப்படி)

## சுனாமியில் இறந்தவர்களின் விவரம் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கம்

### தேர்தல் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.6

ஆழிப்பேரலையால் இறந்தவர்களின் பெயர் விவரங்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு வசதியாக ஆழிப்பேரலையால் இறந்தவர்களின் விவரங்களை தேர்தல் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் சேகரித்து வருகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆழிப்பேரலையால் இறந்தவர்கள் மற்றும் காணாமற்போனவர்களின் பெயர்களைப் பயன்படுத்தி மோசடி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனையடுத்து, ஆழிப்பேரலையால் இறந்தவர்கள் மற்றும் காணாமற்போனவர்களின் விவரங்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு கொழும்புத் தேர்தல் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கிணங்க பிரதேச செயலர்களூடாக கிராம சேவகர்களிடம் ஆழிப்பேரலையால் இறந்த, காணாமற்போன மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு தேர்தல் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் கோரியுள்ளது. (எ-202-203)



## Jaffna college Institute of Technology

Vaddukoddai

**Radio, TV and Electronic Servicing Practice**
காலம்: 6 மாதங்கள் (முழு நேரம்)
முழு அளவிலான செயல்முறை பயிற்சிநெறி
(Full time Practical Oriented Course)

கல்வித்தகைமை:
G.C.E.O/L வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.
விசேட பயிற்சி: UPS, Computer Power supply, Monitor, CD Player, DVD பழுது பார்த்தல்.
Apply before 14th Sept.2005.
மேலதிக விவரங்களுக்கு
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**Director,**
**Jaffna College Institute of Technology,**
**Vaddukoddai.**

T.Phone: 0602213139 Email:jcit@sltnet.lk
Or 021 222 8275. (C/45003)(42-16-34)

## துயர் பகிர்கிறோம்

### அமரர் நாகமுத்து பரராசசிங்கம்

*(முன்னாள் பிரபல வர்த்தகர்)*



யாழ்ப்பாண மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும், புங்குடுதீவு ப.நோ.கூ.சங்கத்தின் தலைவரும், யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் பொதுச் செயலாளரும், யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளருமான திரு.ப.கனகலிங்கம் அவர்களின் பாசமிகு தந்தை அமரர் நாகமுத்து பரராசசிங்கம் அவர்கள் காலமாகிவிட்ட துயரச் செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைகிறோம்.

அவர்களது குடும்பத்தின் துயரில் கலந்துகொண்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

06.09.2005 நடைபெறவிருக்கின்ற இறுதி அஞ்சலி நிகழ்வில் எமது அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**தேசிய எழுச்சிப் பேரவை**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

[39606][42-16-34]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
10.03.1932

இறப்பு
17.09.2004

### திருமதி வேலுப்பிள்ளை செல்வநாயகி (இரத்தினம்)

திதி: திருதியை

ஆண்டு ஒன்று உருண்டோடியது
ஆனால் எம் கண்களில் உருண்டோடிய
கண்ணீர் இன்னும் காயவில்லை
காலம் முழுவதும் கனவிலும், நினைவிலும்
எங்களுடன் கூட வாழும்
எங்கள் அம்மாவின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை என்றும்
பிரார்த்தனை செய்வோம்

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

- குடும்பத்தினர்.

(39660)(39.16.34.42)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் பொன்னுக்கோன் சாவித்திரி

மலர்வு 28-02-1936 உதிர்வு 07-08-2005

திதி: திருதியை

எங்கள் குடும்பத் தலைவி சிவபதமடைந்ததும் ஓடோடி வந்து ஆறுதல் கூறி சகல விதத்திலும் உதவிகள் செய்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய அனைத்து உள்ளங்களிற்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் இன்று (06.09.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

214/11, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(39668)(32.16.34.42)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆங்கிலத்தில் கலமாகக் கதைக்கப் பயில பாலர் வகுப்பில் இருந்து மேற்படிப்புவரை வகுப்புகள்.
மாதாந்தக் கட்டணம் 200/=
426(302),K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

எமது வைத்திய நிலையத்தின் ஆய்வு கூடத்தில் பயிற்சிபெற விரும்பும் A/L Bio படித்த பெண்பிள்ளைகள் உடன் தேவை. நேரில் வரவும்.
தொடர்பு:
**SAMPANTHAR MODERN CLINIC**
NO. 08A, RamaiahChettiar Lane,
Jaffna.
(39629) (21)

### கார் விற்பனைக்கு

11 ஸ்ரீ XXXX தொடரிலக்கமுடைய Toyata Corrola கார் (பச்சை நிறம்) விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
**0777-917611**
(New Science Hall)
(39639) (21)

### ஜெனரேட்டர் விற்பனைக்கு

டீசலில் இயங்கும் 4000W KUBOATA - ASK - A - 130 BRAND NEW MODAL 1600 RPM (SELF START) ஜெனரேட்டர் சிறிது காலம் பாவித்தது. நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773 222721.

### ஓட்டோ சாரதி தேவை

எமது கம்பனிக்கு ஓட்டோ சாரதி அனுமதிப்பத்திரம் உடையவரும் அனுபவம் உள்ளவருமான ஓட்டோ சாரதி தேவை.
தொடர்பு: திட்ட முகாமையாளர்
புரோ மோட்டோர்ஸ்
என்ஜினியரிங் கம்பனி,
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(சி-45041)

### குடத்தனையில் பாரதி விழா

குடத்தனை, தென்னிந்தியத் திருச்சபை கல்வி வளாகத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் பாரதிவிழா எதிர்வரும் 24ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்வி வளாகத்தில் முத்தமிழ் மன்றத் தலைவி செல்வி யோ.கனிமொழி தலைமையில் நடைபெறும் இந்தவிழாவில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரும் செயற்றிட்ட இணைப்பாளருமான சந்திரன்பிரான்சிஸ் கலந்துகொள்வார்.

விழாவில் கல்விவளாக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும். (எ-78)

### திருவிழாத் திருப்பலி

யாழ்ப்பாணம், செப்.6

துன்னாலை சதாசகாய அன்னை ஆலயத் திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. கடந்த 4 ஆம் திகதி முதல் ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. (எ-9)

### பாங்ஷால் வீதி பலத்த சேதம்

குருநகர், செப்.6

குருநகர் பாங்ஷால் வீதி பல இடங்களில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால், இவ்வீதியூடாகப் பயணிக்கும் பாதசாரிகளும் வாகனப் பயணிகளும் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகிறார்கள்.

யாழ்.சென்பற்றிக்ஸ் வீதிக்கும் குருநகர் ஆறாம் குறுக்குவீதிக்கு இடையிலும் - குருநகர் நான்காம் குறுக்குவீதிக்கும் யாழ். இரண்டாம் குறுக்கு வீதிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே மேற்படி வீதி பலத்த சேதம் அடைந்துள்ளது. (எ-51)

## வாழ்த்துகிறோம்



யாழ். மாவட்டத்தில் பலசமூக சேவை அமைப்புகளில் சேவையாற்றி மீண்டும் யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளராக பதவி ஏற்றிருக்கும்
**திரு.சி.வி.கே.சிவஞானம்**
அவர்களது பணி மீளவும் யாழ்.மக்களுக்கு கிடைத்தமையையிட்டு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சமூகம்.

[சி-025][42-16-34]

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



செல்வன்
### சிவராசா சிவகாந்தன்

மண்ணில் 18-05-1980
விண்ணில் 22-07-2005

உன் காலத்தின் கோலத்தால் வந்தநிலையடா?
மண்ஏற்ரி வந்த நிலையில் பரிதாபநிலையில் உன் உடலில்
இருந்து உயிர்மூச்சு போனது என்ன வழியடா?
என் செய்வேன் விதியின் சதிதான்!
உன் ஆத்மசாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

தொட்டிலடி, சங்கானை.
T.P.: 0779239258.

உன் உயிருக்காக வாழும் உறவுகள்.

(39640)(42-16-34)

## துன்பச்சுமை நிறைந்த ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 17 - 07 - 1940



ஆண்டவன் மடியில் 18 - 08 - 2004

### அமரர் பொன் நடேசன்

*(இளைப்பாறிய அதிபர்)*

திதி: துதியை 06.09.2005

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததனால்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவீர்''

'ஓராண்டென்ன ஓராயிரமாண்டானாலும் மறக்கும் உருவமல்ல; உங்கள் வார்த்தைகள் மறக்க கூடியதுமல்லவே!'' சகல உறவுகளையும் நேசித்து நல்லாசிரியனாய்; அதிபராய்; பண்பிலே தெய்வமாய் எங்களுக்காகவும்; கல்விச் சமூகத்திற்காகவும் வாழ்ந்த எங்கள் தலைவனே! எங்குசென்றீர்? உங்கள் இழப்பை எங்களால் சகித்துக் கொள்ள முடியவில்லையே!
குழந்தையாய் எங்கள் குடியில் வந்துபிறந்திட வரம் கேட்டு நிற்கின்றோம் வரம் தாருமைய்யா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (06.09.2005) செவ்வாய்க்கிழமை எங்கள் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அண்ணா வீதி,
அச்சுவேலி தெற்கு.
அச்சுவேலி.

என்றும் பிரியாது வாழும்:
- குடும்பத்தினர்.

(சு-45038)(42-16-34)

## M.M.C.C நேரடி அறிவிப்பாளர் பயிற்சி நெறி

**இறுதிப்பிரிவு ஆரம்பம்: 10-09-2005**

- ஒலி பரப்பு வரலாறு
- மேடை நிகழ்ச்சித் தொகுப்பு
- அறிவிப்பு
- நேர்காணல்
- செய்தி வாசிப்பு
- நேர்முக வர்ணனை
- செய்தி அறிக்கை தயாரிப்பு
- நிகழ்ச்சிஅமைப்பு

அனுமதிகளை எமது அலுவலகத்தில் முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

50 % சிறப்புக் கழிவு

O/L பரீட்சையில் நீங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

மேலதிக விபரமறிய
0776910612
2227866

**பத்திரிகையாளர் பயிற்சிநெறி ஆரம்பம்: 25-09-2005**

பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரிய விரும்புபவர்களுக்கான பிரத்தியேக பாடநெறியாக இப்பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளதால் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

M.M.C.C இல.328, ஸ்ரான்லி றோட், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(39632)(21-16-34-42)

# கட்சி கொள்கைக்கு முரணாக யாருடனும் பேச்சுக் கூடாது!

## சு.க. மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி திட்டவட்டம்



ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பிரதமர் ராஜபக்ஷ யாருடன் பேச்சு நடத்தினாலும் அது கட்சியின் கொள்கைகளுக்கு முரணான விதத்தில் இருக்கக்கூடாது என்று கண்டிப்பாகத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சுதந்திரக் கட்சி மத்திய குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. அதிலேயே ஜனாதிபதி இதனைத் திட்டவட்டமாக அறிவித்தார். நேற்றுமுன்தினம் மாலை 4 மணி முதல் சுமார் நான்கு மணி நேரம் இந்தக் கூட்டம் நடைபெற்றது. அதில் கட்சியின் முக்கிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

சுதந்திரக் கட்சியின் ஆயுட்காலத் தலைவியாக சந்திரிகாவை நியமிப்பது குறித்தும், பிரதமர் - ஜே.வி.பியினர் பேச்சுக்கள் குறித்தும் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது.

கட்சியின் ஆயுட்காலத் தலைவியாக ஜனாதிபதி இருக்கவேண்டும் என்ற யோசனையை மூத்த தலைவர்கள் சிலர் முன்வைத்தனர். அது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, கட்சி ஏகமனதாக அப்படியொரு தீர்மானத்தை மேற்கொண்டால் தவிர, தான் அவ்வாறு இருக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தனது பதவிக்காலம் முடிவடையும்வரை தான் தொடர்ந்தும் கட்சியின் தலைவராக இருப்பார் எனவும் -

அதன் பின்னர் கட்சியின் தீர்மானப்படி செயற்படுவார் என்றும் - ஜனாதிபதி அங்கே மேலும் தெரிவித்தார்.

அதேசமயம், ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு தருவது குறித்து தான் ஜே.வி.பியினருடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்தில் விளக்கினார். இதுவரையான பேச்சுகளில் எட்டப்பட்ட முடிவுகள், பயன்கள், இனி மேல் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் என்பவற்றை அவர் எடுத்துக் கூறினார்.

விவரங்களைக் கேட்ட ஜனாதிபதி, யாருடன் பேச்சுக்களை நடத்தினாலும் கட்சியின் கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் இருக்கவேண்டும் என்று திட்டவட்டமாக அறிவுறுத்தினார். பொதுக்கட்டமைப்பு, சமாதான முயற்சி போன்ற விடயங்களில் கட்சியின் நிலைப்பாட்டில் இருந்து எந்தக் காரணத்திற்காகவும் இறங்கிச் சென்று பிரதமர் பேச்சு நடத்தக்கூடாது என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் வேட்பாளர் வெற்றிபெற்றால் அவர் கட்சியின் பிரதித் தலைவராகத் தெரிவு செய்வது என்றும் நேறறைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

பிரதமருக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான உறவு குறித்து ஜனாதிபதி சீற்றமடைந்திருந்தார் என்று கூறப்பட்டு வந்திருந்ததனால் இந்தக் கூட்டம் காரசாரமாக இருக்கும் என்று பல தரப்பினராலும் எதிர்பார்க்கப்பட்டபோதும் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-க)

# மின்னல் தாக்கி மாணவன் பலி!

## தம்பிலுவிலில் சம்பவம்

திருக்கோவில்,செப்.6

தம்பிலுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மின்னல் தாக்கி மாணவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையின் போது இப்பரிதாபச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முரளிதரன் பகீர்தன் (வயது 11) என்ற மாணவரே பலியானவராவார். தனது வீட்டின் முற்றத்தில் நின்ற மாமரத்தடியில் இருந்தபோதே மின்னல் அவரைத் தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது.

தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுவந்தார் பகீர்தன்.

மின்னல் தாக்கியதும் தம்பிலுவில் மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர், சிறிது நேரத்தில் அங்கு மரணமானார்.

உடனடியாக மரண விசாரணைகளை நடத்திய மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் விஜயசிறி, மின்னல் தாக்கியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். (எ-க)

### ஜனாதிபதித் தேர்தலில்

# ஹெல உறுமய பொதுச் செயலர் ரணிலுக்கு ஆதரவாகப் பிரசாரம்

கொழும்பு, செப்.6

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்துக் களமிறங்கப் போவதாக ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ள அதேவேளை, அக்கட்சியின் பொதுச்செயலாளர் வண. உடுவே தம்மாலோக்க தேரர் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாகப் பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், உடுவே தம்மாலோக்க தேரருக்குமிடையிலான முக்கியமான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தப் பேச்சுகளின்போது ஐ.தே.கவிற்கு ஆதரவாக ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரம் மேற்கொள்வதற்கு உடுவே தம்மாலோக்க தேரர் இணக்கத்தைத் தெரிவித்தார் என ஐ.தே.க. வட்டாரங்கள் கூறின.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள இனவாதச் சக்திகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் அணி திரண்டிருப்பதால் தம்மாலோக்க தேரர் ஐ.தே.க. தலைவருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்திருக்கிறார் எனவும் தெரிகிறது. (எ-க)



வலிகாமம் மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையினர் அண்மையில் நடத்திய கலை இலக்கியப் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வின்போது கலாபூஷணம் க.நாகப்புவுக்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிவசுவாமி மேடையில் அமர்ந்திருப்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம். *(படம்: வலிகாமம் மேற்கு செய்தியாளர்)*

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருக்கு ஜனாதிபதி தேநீர் அளித்துக் கௌரவம்

கொழும்பு,செப்.6

ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குள்ளான மக்களுக்காக ஆயிரத்துக்குமதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளமைக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருக்கும் அதுபோன்ற நிறுவனங்களுக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அண்மையில் தேநீர் விருந்தளித்துக் கௌரவித்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மேற்கொண்டுள்ள பணிகளை ஜனாதிபதி அங்கீகரித்திருப்பதனாலேயே இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளரும் நிவாரண பணிகளுக்கான செயல் படையின் தலைவருமான திலக் ரணவிராஜாவினால் கையெழுத்திடப்பட்ட சான்றிதழ் ஒன்றும் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இம்மாதிரிப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை அங்கீகரிப்பது அரசாங்கத்தின் கொள்கையென்றும் அதன் காரணமாகவே இவ்வாறான 9 நிறுவனங்கள் அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டதாகவும் ரணவிராஜா கூறியுள்ளார்.

ஐ.நா. முகவர் அமைப்புகளையும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரசு சாரா நிறுவனங்களையும் சேர்ந்த 9 நிறுவனங்கள் அண்மையில் ஜனாதிபதி மாளிகைக்கு அழைக்கப்பட்டு தேநீர் விருந்தளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரிட்டனில் தடை செய்யப்பட்டுவிட்டதாகவும் கனடாவில் பதிவு மறுக்கப்பட்டுவிட்டதாகவும் சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தபோதிலும் இலங்கை அரசாங்கத்தினால் அவ்வமைப்பின் சேவைகள் அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ப)

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழாச் சிறப்பம்சம்


### தீர்வை அருள்

மறையருள் புகழ்
வள நாட்டின் - சைவ
இறையனார்க்கு வந்த
காவல் தெய்வமாய் காங்கேசன்
துறை வீதி துர்க்கா புரமேவு
சுந்தரியே - தமிழர்
நிறையருள் தெய்வமாய்
திகழ் அன்னையே - இது
முறையோ இன்னுமெம் துயர்
தீரவில்லையே துர்க்கா
வினை திறன் மிகு தீர்வையருளி
திருவருளதனை தருவாயே!

*- ஜெயஹேமலதா.*



அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயம் - தெல்லிப்பழை




பாடு. பரவு. பணிசெய். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க அனுசரணையுடன்

விழா சிறப்புற வாழ்த்துவோர் :-
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் சங்கமம்.

### இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில்

# இரட்டை வேடமிடுகிறார் பிரதமர் மஹிந்த ஐ.தே.க. பொதுச் செயலர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.6

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரட்டைவேடம் போடுகின்றார் என்று குற்றஞ்சாட்டுகின்றார் ஐ.தே.கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

"ஒருபுறம் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாகப் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் எனக் கூறும் பிரதமர், மறுபுறம் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம், பொதுக் கட்டமைப்பு என்பவற்றுக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்பனவற்றிற்கு ஆதரவளிக்கமாட்டேன் என ஜே.வி.பியினருக்கும் உத்தரவாதம் அளித்துள்ளார். இவை இரண்டில் பிரதமர் எதைச் செய்யப்போகின்றார்?" என்றும் அத்தநாயக்க கேள்வி எழுப்புகின்றார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பியினருடன் நெருங்கிய தொடர்புகளைப் பிரதமர் ஏற்படுத்தி வருவது கட்சிக்குள்ளும் அதிருப்தியை உருவாக்கியுள்ளது. இதற்கிடையே தமிழ் மக்களை ஏமாற்றும் வகையில் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசுவேன் எனப் பிரதமர் கூறித் திரிகின்றார். விமல் வீரவன்ஸ போன்று புலிகளின் தலைவரையும் நினைத்துக் கொண்டு பிரதமர் பேசுவது அவரது அரசியல் சூனியத்தன்மையையே காட்டுகின்றது.

ஜே.வி.பியினருடனும் புலிகளுடனும் ஏககாலத்தில் உறவை ஏற்படுத்திக்கொள்ள பிரதமர் நினைப்பது பகல் கனவு.

ஜே.வி.பி.யினரைத் தோளில் வைத்துக்கொண்டு புலிகளின் தலைவருடன் பேசுவேன் எனப் பிரதமர் கூறித் திரிவது, பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டுவதற்கு ஒப்பானது. பிரதமரின் 'பாச்சா' தமிழ் மக்களிடம் பலிக்காது என்றும் - திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

(எ-க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 153-xxxx (கூட்டு எண்-7) இலக்கமுடைய Yamaha Newsmate-90 (நீலநிறம்) யப்பான் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773246858 (மாலை நேரத்தில் பார்வையிடலாம்).(39648)

500 - தொடரிலக்கமுடைய பிரஸ்கப் -50 கொண்டா விற்பனைக்குண்டு. தொடர்பு: நந்தகுமாரன், மீசாலை வடக்கு. T.P.: 077666 0528 (39647)

குரோட்டன், பாம்ஸ், அரக்கெரியா, சைபிரஸ், றெசீனா, பாங்கொக் போகன்விலா (கடதாசிப்பூ), செவ்வரத்தை, முசந்தாஸ் (வெள்ளை, பிங்), அரலியா, ஔரண்டா ஆகிய பூக்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.பாக்கியநாதன், 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 6563. (39627)

கடைக்கு உபயோகப்படுத்தக்கூடிய முதிரை மரத்திலான கண்ணாடிக் கதவுகளைக் கொண்ட மூன்று மர அலுமாரிகள், இலாச்சிகளுடன் கூடிய மரத்திலான இரண்டு மேசைகள் 3'x8' கதவுள்ள றாக்கைகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: ரமேஸ்குமார், 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.No. 021-222 5265. (39633)

அழகிய 14 மாதங்கள் நிரம்பிய தூய German shepeard இன ஆண்நாய் கூட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.220, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (பெந்தகொஸ்தே சபைக்கு அருகில்) T.P.: 0779236341. (39631)

### காணி விற்பனைக்கு

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகில் 3 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021-222 5279 (திரு.ந.சிகுமார்). (39578)

ஆனந்தன் வடலி வீதியில் 6 பரப்புக் காணி (செபமாலை மாதா கோயிலிற்கு முன்பாக) பகுதியாகவோ மொத்தமாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு: த.பரமசாமி, இல.33, இரண்டாவது விதானையார் வீதி, சண்டுக்குளி, யாழ்ப்பாணம். (39620)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர்-1 பகிராபுறொயிலர்குஞ்சுகள் 07.09.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ் -ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை - முதலாம் கட்டை பருத்தித்துறை, றஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட், றாதா- மாவடி வட்டுக்கோட்டை, P.ரவி - சாவகச்சேரி. T.P.No.: 222 2867, 222 3529. (39474)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39658)

### ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும். உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒரு முறை நாடுங்கள். இந்தியப் பரம்பரை ஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (39656)

### தவறிவிட்டது

கந்தையா இராஜேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (527946352V), விசேட அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் (செலான்), சிறுதொகைப்பணம் என்பன அடங்கிய பேர்ஸ் 01.09.2005 அன்று நல்லூர் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.24, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர் -யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (39652)

மனுவல் சூசைதாசன் என்பவருடைய கடவுச்சீட்டு 29.08.2005 அன்று குருநகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். வின்சன் இம்மனுவல், இல. 81, பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணம் T.P.No. 0777 248366. (39523)


**அறிமுகப்படுத்துகின்றோம்**

யாழ்.மண்ணில் முதன் முதலாக
**Deco Lazer Digital Printer**
மிகக்குறைந்த கட்டணத்தில்


4x6 → 5/- 8x12 → 30 /-
10x15 → 40/- 12x18 → 50 /-
CD கவர் → 6/- CD ஸ்ரிக்கர் → 5/-

புத்தம் புதியனவற்றை அறிமுகப்படுத்தும் ஒரே நிறுவனம்

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர்லாப்**

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (சி-46080)(21.84.18) யாழ்.வீதி, மானிப்பாய்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கதிரவேலு பரஞ்சோதி

(வேலணை கிழக்கு)

மண்ணில் 06-05-1928 விண்ணில் 16-09-2004

குடும்பத்தின் குலவிளக்காய்
பாசத்தின் உறைவிடமாய்
எம் வாழ்வை இனிதாக்கி
எமக்கு நல்வழிகாட்டிய தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது
ஓம் சாந்தி!

வேலணை கிழக்கு, வேலணை.4. - குடும்பத்தினர். (39646)


## SALES PROMOTIONS OFFICERS
### Walk in interview

The ideal candidates should have passed GCE(A/L) examination and be able to converse at least two languages. A minimum of 2 years experience in a reputed manufacturing/ marketing organization is also required.

The job assigned to this post is challenging and involves working in the Northern Province in close liaison with Area Distributors and Dealers.

He should ensure a satisfactory level of distribution of Kelani products through the dealer net work. The appointee will be expected to achieve set territory target and provide market information useful for planning purposes.

The Company offers an attractive salary package and pleasant and friendly working environment, in addition to the salary, the selected candidate will be provided with a Company van to carryout duties.

Interested candidates who possess the specified qualifications and work experience, please call over to

NEW LANKA TRADERS (PVT) LTD.
222 & 226, Stanley Road, Jaffna.
T. Phone 021-2222062 & 2222838
On 8th September at 10.00 a.m.

(39608)(29-11-45)

KELANI CABLES

Sales Manager, Distribution
Kelani Cables Limited
P.O. Box 14
Weweldula Kelaniya


வேலும் மயிலும் துணை

## செல்வச்சந்நிதி ஆனந்தசாமி மடம் அன்னதானச் சபை
### நன்றி நவில்கின்றோம்

2005 ஆம் ஆண்டு திருவிழாக் காலங்களில் நடைபெற்ற அன்னதானப் பணிக்கு பல இடங்களில் இருந்தும் நிதியுதவி, பொருள் உதவி வழங்கினார்கள். இம்முறை (2005 ஆம் ஆண்டு) சிறப்பாக நடைபெற்றது.

மேலும் நயினாதீவைச் சேர்ந்த அடியார்கள் தந்து உதவிய நிதியில் இருந்து இம்முறை அன்னதானம், தேநீர், குளிர்பானம் வழங்கப்பட்டது. எமது அன்னதானச் சபைக்கு உதவிய அன்பர்கள், அனைத்து அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

அத்துடன் மடத்திற்கு பல சேவைகள் செய்ய வேண்டி இருப்பதால் தம்மாலான உதவியை தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**2005 ஆம் ஆண்டு நிதியுதவி பெற்றுத் தந்தவர்கள்**

| | | |
|---|---|---|
| திரு. S.சின்னத்துரை | - | 1ஆம் வட்டாரம், நயினாதீவு. |
| திரு. M.இளையதம்பி | - | 1ஆம் வட்டாரம், நயினாதீவு. |
| செல்வன் T.பிறேமன் | - | 1ஆம் வட்டாரம், நயினாதீவு. |
| செல்வன் S.கமல்ராஜ் | - | 1ஆம் வட்டாரம், நயினாதீவு. |
| செல்வன் P.ஜெயரூபன் | - | 1ஆம் வட்டாரம், நயினாதீவு. |
| மொத்தத் தொகை | - | 44,705.00 |
| பொருள் செலவு | - | 35,964.50 |
| கையிருப்பு | - | 8,740.50 |

சி.வல்லிபுரம் (பரிபாலகர்),
ஆனந்தசாமி மடம்,
சந்நிதி - தொண்டைமானாறு.

(39598)(32-21-34-18)


## வேலை இல்லையா?

விருப்பமில்லை? தகுதியில்லை? முயற்சியில்லை?

SAAMSTECH இன் பயிற்சிநெறிமூலமாக இதுவரை 120 பேர் பணி நியமனம். 60 பேர் பயிற்சியில்.

ஆங்கில ஆசிரியர்கள், அலுவலர்களுக்கான
**பயிற்சியும் பணிநியமனமும்**

**பயிற்சியின் பின்னரான பணிநியமனம்**

- நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள்
- சர்வதேச தொழில்நுட்பச்செயற்பாடுகள், இணையதள, மென்பொருள் மற்றும் கற்கைநெறி விருத்தியாக்கத்தில் பணி
- நிறுவன நிர்வாக செயற்பாடுகள்

பயிற்சிக்காலம் : 3 மாதங்கள். தினமும் நான்கு மணிநேரம், வாரத்தில் 5 நாட்கள்
பணி நியமனம் : 05.12.2005
கட்டணம் : ரூபா 12000/-
கல்வித்தகுதி : க.பொ.த உயர் தரத்தில் சித்தி (ஆங்கில பாடத்தில் சித்தி எதிர்பார்க்கப்படவில்லை)

**பல்கலைக்கழக அனுமதியை தவறவிட்டவரா?**

ஒரு பிரிவில் 40 பேர் மட்டும் பாடநெறியில் சேர்த்துக்கொள்ளப்படுவதால் சுயமாக பூர்த்தி செய்த சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்

குறிப்பு : அடுத்த பிரிவில் இருந்து பயிற்சிக்காலம் நான்கு மாதமாகவும் கட்டணம் ரூபா 18000/- ஆகவும் அதிகரிக்கப்படவுள்ளது

**SAAMSTECH**
TEACHERS TRAINING COLLEGE
841, HOSPITAL ROAD, JAFFNA. PH : 0773068968


## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 - 10 - 1972



உதிர்வு 06 - 09 - 1996

### செல்வன் இரத்தினம் ஜெயன்

(யாழ்.பல்கலைக்கழக மாணவன்)

குடும்பத்திற்கு குலவிளக்காய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
இளமைப் பருவத்தில் மாண்புடன்
வாழ்வாய் என்றிருக்க எங்களை
ஏங்க வைத்து எங்கு சென்றுவிட்டாய்?
பால் வடியும் முகமும் சிரித்த வதனமும்
இனி எங்கு நாம் காண்போம்?
மறக்கமுடியாத உமது கனவும் மறைவும்
எம் மனதில் மறையாதிருக்கும்.

கைதடி தெற்கு, கைதடி. (39625)(32-21-34-18) குடும்பத்தினர்.


**S.L.A.S**
வகுப்புகள் ஆரம்பம்
06-09-2005
செவ். - 5.30
நிரு ரீயூசன் சென்ரர்
கோண்டாவில்.
(39638)(21.34.18)

**Hardware Workshop**
கணனிப் பராமரிப்பும் திருத்தியமைத்தலும்
PC Maintenance & Trouble Shooting
4 Days 3 Hours Per Day

செப்ரம்பர் மாதம் 10,11,17,18ஆம் திகதிகளில் கட்டணம் 700/=

14 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். திறமையான மாணவருக்கு Microsoft நிறுவனத்தின் Computer Engineer, A+ கற்கைக்கான புலமைப்பரிசில்

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் நேரில், MCS,324, Palaly Road, Jaffna. பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP

# தேசிய மட்ட வலைபந்தாட்டம்: யூனியனுக்கு மூன்றாம் இடம்

யாழ்ப்பாணம்,செப்.6

கொழும்பில் நடைபெற்று வரும் தேசிய மட்டப் போட்டிகளில் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

கொழும்பில் நடைபெற்றுவரும் தேசிய மட்டப் போட்டிகளில் சகல மாகாணங்களில் இருந்தும் அணிகள் பங்குபற்றுகின்றன.

நேற்றுமுன்தினம் நடந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் காலி டிக்வெல்ல ம.வியும் மோதின.

விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 37:31 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிஸ்ணர் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புக் கடைசி மகனும் உருக்குமணியின் அன்புக் கணவரும் சகுந்தலா (சுழிபுரம்), சிவராசா (புத்தளம்), காணாமற்போன சற்குணராசா, பத்மராசா (மாவீரர் ஜெமினி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவஞானராசா, ஜெயமலர், ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சனா கோசிகா, தக்ஷன், நிக்ஷன், ஜொய்சினா, சிந்துயா, துஸ்யந்தன், ராகுலன், டிலக்சினி, மதீசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.09.2005 ஞாயிற்றுக்கிழமை புத்தளத்தில் இடம்பெற்றது. நேற்று (05.09.2005) திங்கட்கிழமை அஞ்சலி நிகழ்வு அவரது இல்லத்தில் இடம்பெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**உருக்குமணி (மனைவி),**
**சகுந்தலா (மகள்).**

(39645)(32-16-11)

# வேலையாள்கள் தேவை

சாவகச்சேரி நகரின் மையப்பகுதியில் இயங்கும் குறோசரி நிறுவனத்திற்கு குறோசரி அனுபவம் நிறைந்த ஆண்/பெண் இருபாலாரும் தேவை.

தொடர்புகளுக்கு:
இல.1, நவீன சந்தை, சாவகச்சேரி.
**077 322721**

(சி/45027)(42-32-16-11)

# மரண அறிவித்தல்

## திருமதி றஞ்சிதலேகா - நவனீதன்



அல்வாய் வடக்கு திருத்தணியைச் சேர்ந்த திருமதி றஞ்சிதலேகா நவனீதன் அவர்கள்நேற்று (05-09-2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், முருகேசு நவனீதன் அவர்களின் பாசமிகு மனைவியும் சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், திருத்தணி வ.மு.முருகேசு -அமரர் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், திருமதி த.சங்கீதா, திருமதி பா.ஜெயதீபா, சுகிர்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், த.தயாளன் (சமுர்த்தி முகாமையாளர், நல்லூர் பிரதேச செயலகம்), இ.பாஸ்கரன் (முகாமையாளர், கேம்பிறிட்ஜ் ஹாட்வெயர்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாருகேசனின் அன்புப் பேர்த்தியும், சித்திரலேகா, இராஜேந்திரநாதன் (ரவி-சுவிஸ்), சந்திரலேகா,செல்வரதி, ரேணுகா, சுரேந்திரன் (பவி-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதிரியும், மு.ஜெகனீதன் (சந்துஜன், நெல்லியடி) மு.குகனீதன் (லண்டன்), மு.றஞ்சனீதன் (சுவிஸ்), மு.வாசுநீதன் (லண்டன்), சின்னராஜன் (ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி), புஸ்பநாதன், வரோதயன், பிரபாகரன் (உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்), மதனா (சுவிஸ்), தர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பொலின், யசோதா (லண்டன்), பிரபாஜினி (சுவிஸ்), சுஜாதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலியும், சந்துஜன், சங்கீர்த்தன், சங்கவி, தார்மீகன் ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-09-2005)செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"திருத்தணி"*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*

**தகவல்:**
**த.தயாளன்.**
**(மருமகன்)**

(39665)(32-16-11)

# 31ஆம் நினைவு நாள்

தோற்றம்
01 - 06 - 1925



மறைவு
07 - 08 - 2005

## திருமதி இரத்தினம் வைத்திலிங்கம்

**"அன்பான அம்மாவே ஆறாது எம்முள்ளம்"**

அன்பின் உறைவிடமாய்
எம்மை எல்லாம் பாசமாகக் காத்தவரே!
எம் இனிய குலவிளக்கே!
பாரினிலே எம்மை எல்லாம்
பரிதவிக்க விட்டு விட்டு!
பாதியிலே நாம் பார்த்திருக்க அணைந்ததுவா
உம் ஒளிவிளக்கு!

"முருகவாசா",
மீசாலை கிழக்கு, மீசாலை. (39651)(32-16-11)

**குடும்பத்தினர்.**

# கெயர் சர்வதேசம்

care

## மூலப்பொருள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்

கெயர் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்ட நடவடிக்கைகளுக்காகப் பின்வரும் பொருள்களைப் பருத்தித் துறை திட்டப் பிரதேசத்தில் விநியோகிப்பதற்குத் தகுதியான விநியோகஸ்தர்களிடம் இருந்து மூடிய கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. கூரை ஓடு
2. இரும்புக் கம்பிகள்
3. தயாரித்த மரக் கதவு/யன்னல்
4. மின்சார இணைப்புகள்
5. ஆற்றுமணல் (கண்டாவளை)

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கும் விண்ணபப்படிவங்களைப் பெறுவதற்கும் பருத்தித்துறையில் உள்ள கெயர் அலுவலகத்துடன் கடமை நேரத்தில் தொடர்புகொள்ளவும். இதற்கான விண்ணப்பங்களை 12.09.2005 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பருத்தித்துறை கெயர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கவும்.

**திட்டப் பணிப்பாளர்,**
கெயர் சர்வதேசம்,
சாரையடி, பருத்தித்துறை.
தொலைபேசி: **021 2264259**
தொலைநகல்: **021 2264260.**

(சி-45020)(42-32-16)


உலகத் தமிழர் வானொலி

ஒகஸ்ட் 10ஆம் திகதி முதல்
செப்டம்பர் 5ஆம் திகதிவரை
நல்லூர் கந்தசுவாமி ஆலய
தேர்த்திருவிழா 2005 நேரடி
ஒலிபரப்பிற்கு அனுசரணை வழங்கிய
நிறுவனங்களுக்கு உலகத் தமிழர்
வானொலி சார்பாக நன்றிகள்.

உலகத் தமிழர் வானொலி
www.wtrfm.com
24Hrs online Radio Service.
அனுசரணையாளர்கள்

சுப்பஸோ

ரவி டிஜிற்றல் A1 கலர் லாப் அன்
சுப்பஸோ வீடியோ, ஓடியோ சென்றர்

கொழும்பில்
சுப்பஸோ டிஜிற்றல் கலர் லாப்
206, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு - 13
தொ.பே. 011-4618370

யாழ் நகரில்
ரவி டிஜிற்றல் A-1 கலர் லாப்
அன் சுப்பஸோ வீடியோ, ஓடியோ சென்றர்
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-222 2082

Thirumurugan Com Net
Communication & computer Systems
WESTERN UNION MOney Transfer
Office
259.K.K.S Road,
Jaffna.
Hot Line 0777 554528
FedEx Express
Tel - 021 222 7835 Fax - 021 222 7836
E.mail :- thirumuruglan@lycosmail.com







Abiramy
அபிராமி
Dealer in Textiles & Shoes
155, 156, New Market,
Jaffna.
Tel : 2223525

E S Perambalam
No. 50, 52, 54,
Kasthuriar Road,
Jaffna.
Tel : 021-222988

MF
மங்களா வீட்டுத் தளபாட நிலையம்
Mangala Furniture Mart
(Dealers in Furniture's Matters and Plastic Items)
No. 153, Kasthuriar Road,
Jaffna.
Tel : 021-2223080

S V M
Esviem's
338, Galle Road, Wellawatta,
Colombo - 06.
Tel : 4518844, 4515561
Fax : 4515170

MMBL MONEY TRANSFER (PVT)LTD
300,Galle Road Colombo 3, Srilanka
PHN +94- 11 2 372333
web MMBL MOney Transfer.com
WESTERN UNION MONEY TRANSFER
WESTERN UNION MONEY TRANSFER

இந்தோனேஷியாவில்

# விமானம் விழுந்து நொறுங்கியதில் 117 பேர் உடல் சிதறிப் பலியாகினர்!



ஜகார்த்தா,செப்.6

இந்தோனேஷியாவின் மேடன் நகர விமான நிலையத்தில் இருந்து நேற்றுக் காலை ஜகார்த்தாவுக்குப் புறப்பட்ட விமானம் விழுந்துநொறுங்கியதில் 117 பேர் பலியானார்கள்.

'மண்டலா எயார் லைன்ஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான அந்த விமானத்தில் 109 பயணிகள் மற்றும் 8 சிப்பந்திகள் இருந்த னர்.

விமானம் புறப்பட்ட சிறிதுநேரத்திலேயே அந்த விமானத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டது. விமானம் நிலை தடுமாறிப் பறந்தது. விமானத்தை உடனடியாக தரை இறக்க விமானிகள் முயன்றனர். ஆனால், விமானம் கட்டுப்பாட்டை இழந்து தரையில் மோதி நொறுங்கியது. விழுந்த வேகத்தில் அந்தவிமானத்தில் தீ பிடித்துக்கொண்டது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்தவர்கள் 117 பேர் உடல் சிதறியும் தீயில் கருகியும் பலியானார்கள். விமான நிலையத்தில ஒடு தளத்தின் அருகிலேயே இந்த விபத்து நடந்துள்ளது. (8)



இது என்ன மாமிசக் கடை என்று எண்ணத் தோன்றுகின்றதா? இல்லை. தாய்லாந்தின் பாங்கொக் நகரில் உள்ள உணவகம் ஒன்றில் மனித உறுப்புக்கள் போன்று தயாரிக்கப்பட்ட றொட்டிகளை விற்பனை செய்வதில் ஒருவர் ஈடுபட்டிருப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

# நியூ ஓர்லியன்ஸில் அகதிகளாகத் தவித்த 42ஆயிரம் பேர் விமானம் மூலம் மீட்பு!

நியூ ஓர்லியன்ஸ், செப்.6

அமெரிக்காவில் சூறாவளித் தாக்குதலுக்கு உள்ளான நியூ ஓர்லியன்ஸ் நகரில், அகதிகளாகத் தவித்த 42 ஆயிரம் பேர் விமானங்கள் மூலம் வெளியூர் கொண்டு செல்லப்பட்டனர்.

சூறாவளியில் வீடிழந்தவர்கள் அந்த நகரின் சூப்பர் டோம் விளையாட்டு மைதானத்திலும், மாநாட்டு மையத்திலும் அகதிகளாகத் தஞ்சமடைந்து, சுகாதாரமற்ற நிலையில், எந்த வசதியும் இல்லாமல் பசியாலும், களைப்பாலும் வாடிக்கொண்டிருந்தனர்.

இரவில் இருட்டில் சமூக விரோதிகளின் கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற செயல்களால் பாதுகாப்பு இல்லாமல் அவதிப்பட்டு வந்தனர். மாநாட்டு மையத்தில் இருந்து மட்டும் 19 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டதாக தேசிய பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த நகரில் இருந்து இதுவரை 42 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டு வேறு ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வெளியூர்களுக்கு அனுப்பவேண்டிய நிலையில் இன்னும் எவ்வளவு பேர் அகதிகளாகத் தவிக்கின்றனர் என்ற விவரம் தெரியவில்லை.

அகதிகளாகத் தவித்தவர்களை வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கும் பணியில் 40 இற்கும் மேற்பட்ட சிவில் போக்குவரத்து மற்றும் இராணுவ விமானங்கள் 24மணி நேரமும் ஈடுபடுத்தப்பட்டன.

விளையாட்டு மைதானம், மாநாட்டு மையம் மற்றும் வீடுகளின் மாடிகளில் தஞ்சம் புகுந்திருந்தவர்கள் ஹெலிகொப்டர்கள், பஸ்கள் மூலம் விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து விமானங்களில் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதற்கென விமான நிலையத்தில், தற்காலிக விமானப் போக்குவரத்து கட்டுப்பாடு சாதனம், கட்டுப்பாட்டு கோபுரம், ஜெனரேட்டர்கள், எரிபொருள், நடமாடும் செயற்கைக் கோள் தகவல் தொடர்பு அமைப்புகள், விமான ஓடுபாதைகள், வாகனப்பாதைகள் முதலியவை விரைந்து அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. (8)

## உலக அரங்கில்

# ஏழை நாடுகளின் தொகை அதிகரிக்கின்றது

# ஆண்டுக்கு 30 லட்சம் பேர் எய்ட்ஸுக்குப் பலி!

## ஐ.நா. செயலாளர் கோபி அனான் வேதனை

நியூயோர்க்,செப்.6

ஏழைநாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துச் செல்கிறது. ஆண்டுதோறும் 30 லட்சம் பேர் எய்ட்ஸ் நோய்க்குப் பலியாகிறார்கள்.

- இவ்வாறு ஐ.நா. செயலாளர் கோபி அனான் வேதனை தெரிவித்துள்ளார்.

இம்மாதம் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐ.நா. உச்சிமாநாட்டில் விவாதிக்கப்படவேண்டிய விடயங்கள் குறித்து ஐ.நா. செயலாளர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 25 ஆண்டுகளில் உலகில் மிகக் கொடிய வறுமை குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. ஆயினும், பல நாடுகள் ஏழை நாடுகளாக மாறியுள்ளன. நூறு கோடிக்கும் அதிகமான மக்கள், ஒரு டொலருக்கு குறைவான தொகையில் தினசரி வாழ்வை நடத்துகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் எய்ட்ஸ் நோய்க்கு 30 லட்சம் பேர் பலியாகின்றனர். தங்கள் ஐந்தாவது பிறந்த நாளை கொண்டாடுவதற்கு முன்பே ஒரு கோடியே 10 லட்சம் குழந்தைகள் இறக்கின்றனர். மனித குலத்தை தேவைகளின் பிடியில் இருந்து விடுவிக்கவும், வளர்ச்சிக்கான உரிமையை அனைவருக்கும் கிடைக்கச் செய்யவும் நிதி வளமும் தொழில்நுட்பமும் இப்போது உள்ளன.

மெக்ஸிகோவின், மான்டெரியில் நடந்த மேம்பாட்டுக்கான நிதி குறித்த சர்வதேச மாநாடு மற்றும் தென் ஆபிரிக்காவின் ஜொஹானஸ்பர்க்கில் நடந்த நீடித்த வளர்ச்சி உச்சி மாநாட்டிலும், 2002ஆம் ஆண்டு மீண்டும் உறுதி செய்யப்பட்ட 'மேம்பாட்டுக்கான உலகளாவிய கூட்டாளித்துவம்' என்ற குறிக்கோள்களை 2005ஆம் ஆண்டில் முழுவதுமாக செயற்படுத்தப்படவேண்டும். பரஸ்பர அக்கறை மற்றும் பொறுப்பும், இந்த கூட்டாளித்துவத்தின் அடிப்படை. வளரும் நாடுகள் அரசாட்சியை வலுப்படுத்த வேண்டும். ஊழலை ஒழித்து, தனியார் துறை மூலமான வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்.

ஆயுதக் களைவு மற்றும் ஆயுதப் பரவல் ஆகிய இரண்டிலுமே, முன்னேற்றம் அவசியம். அணு ஆயுத நாடுகள், தங்கள் அணு ஆயுதங்களை மேலும் குறைத்துக் கொண்டு, ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்களை கடைப்பிடிக்கவேண்டும். ஆயுதங்களை களைவதோடு கூடவே அவற்றை மீண்டும் தயாரிக்காமல் இருக்கவும், இவை வழிவகை செய்யும். அணு ஆயுத சோதனை மீதான தடையை மதித்து நடக்கவும், பாதுகாப்பு உறுதிமொழிகளுக்கு தங்கள் உறுதிப்பாட்டை அளிக்கவும், இந்த நாடுகள் வகை செய்யவேண்டும். ஆயுதப் பரவல் தடுப்பில், உலகம் முழுவதும் மாதிரி கூடுதல் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் சர்வதேச அணுசக்தி அமைப்பின் சரி பார்க்கும் அதிகாரம் வலுப்படுத்தப்பட வேண்டும். அணு ஆயுத பொருள்களை விலக்கிடும் ஒப்பந்தத்தை தயாரித்து, கையெழுத்திட்டு அமுல் செய்ய இந்த நாடுகள் உறுதி பூண வேண்டும்.

- என்றார். (8)

# இந்தோனேஷியாவில் 9 ஆம் திகதி மீண்டும் பூகம்பம் ஏற்படும் அபாயம்?

சென்னை,செப்.6

கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி இந்தோனேஷியாவில் ஏற்பட்டது போன்ற மிகப் பெரிய நிலநடுக்கம் மீண்டும் ஏற்படும் அபாயம் உள்ளது என்று சென்னைப் பல்கலைக் கழகப் பயன்பாட்டு நிலவியல் துறை ஆய்வாளர் என்.வெங்கடநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியா மென்டாவை தீவுகளில் மையம் கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்படக்கூடும். இந்த நிலநடுக்கம் 8 ரிச்டர் அளவுக்குப் பதிவானாலும் சுனாமி ஏற்படும் சாத்தியக்கூறு மிக மிகக் குறைவு என்றும் அவர் கூறியுள்ளார்.

நில, வான் இயற்பியல் கணிப்புகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட ஆய்வு மூலம் இத்தகவல் தெரியவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அங்கு நிலநடுக்கம் ஏற்படும் அதே சமயத்தில் இந்தியாவில் அசாம், நிக்கோபார் தீவு, இமாசலப் பிரதேசம் அல்லது குஜராத் ஆகிய பகுதிகளிலும் மிதமான நிலநடுக்கம் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன.

செப்ரெம்பர் இரண்டாம் வாரத்தில் அசாமில் நிலநடுக்கம் ஏற்படாவிட்டால், 27 ஆம் திகதி ஏற்படக்கூடும் என்றும் வேங்கடநாதன் தெரிவித்தார். (8)


மார்க்கோணியின் மின்சாதன பாதுகாப்புக கையேடு

120 வீட்டு மின்சாதனங்கள்
மின் உதவிச்சாதனங்கள்
மின்விரய குறிப்புகள்
மின் அருஞ்சொற்கள்
வீட்டு மின்னியல்
மின்தாக்க முதலுதவி
பாவனையாளருக்குரிய
மின் அலகுகள்,குறியீடுகள்

நேரடி விலை 230/=

இலங்கையில் முதல் முதலாக ஓர் புதிய பரிமாணத்தில் அனைவர் வீட்டிலும் இருக்கவேண்டிய பாவனையாளருக்குரிய மின்சாதன பாதுகாப்புக் கையேடு ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை புத்தகக் கடைகளில் பெறலாம். கடைகளில் பெறமுடியாதவர்கள், இதனை உறுதியான பதிவுப்பார்சல் மூலம் விரைவாகப் பெறுவதற்கு 260 ரூபா மணிஓடரை பதிவுத்தபால் மூலம் எமது முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

அனுப்பவேண்டிய தபாற்கந்தோர் :- Wellawatta.
பெறுபவரின் பெயர் :- Manager, Marconi Technical Institute.

MARCONI TECHNICAL INSTITUTE
410, 2nd Floor, Galle Rd, Wellawatta. TP - 0112 361362





# நேபாள முன்னாள் பிரதமர் கொய்ராலா கைது!

காத்மாண்டு, செப்.6

நேபாளத்தில் அரசியல் கட்சிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி நடந்த பேரணியின்போது நேபாள முன்னாள் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா உட்பட பல தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

பேரணியில் பங்கேற்றவர்களை கலைக்க பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி, கூட்டத்தினரைக் கலைத்தனர். இதில் சிறிய காயமடைந்த கொய்ராலா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (8)

# சட்டீஸ்கார் மாநிலத்தில் நக்சலைட்டுகளின் கண்ணிவெடியில் சிக்கி 24 பொலீஸார் பலி!

ராய்ப்பூர்,செப்.6

சட்டீஸ்கார் மாநிலத்தில் நக்சலைட்டுகளின் கண்ணிவெடியில் சிக்கி 24 மத்தி பொலீஸ் படையினர் உயிரிழந்துள்ளனர்; மூன்று பேர் காயம் அடைந்தனர்.

ஆந்திராவை ஒட்டியுள்ள ஒரிஸா, மத்தியப் பிரதேசம் சட்டீஸ்கார் மாநிலங்களில் நக்சலைட்டுகளின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆந்திராவைப் போலவே சட்டீஸ்காரிலும் இவர்கள் பலம் பெற்று வருகின்றனர். மிகவும் சக்தி வாய்ந்த வெடிமருந்துகளையும் இவர்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி மாலை பீஜப்பூரிலிருந்து படோடா என்ற இடத்தில் உள்ள பொலீஸ் முகாமுக்கு 2 உள்ளூர் பொலீஸார் உட்பட 27 மத்திய பொலீஸ் படையினர் ஒரு லொறியில் சென்றனர். இந்த லொறி கண்ணி வெடியையும் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. போஞ்சர் என்ற இடத்தில் ஒரு வளைவில் லொறி திரும்பும்போது மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் வெடித்தன.

லொறியில் இருந்த 24 பாதுகாப்புப் படையினரும் இறந்தனர். 3பேர் காயம் அடைந்தனர்.

இதுகுறித்து முதல்வர் ராமன் சிங் மற்றும் உள்துறை அமைச்சர் ராம்விசார் நேத்தம் ஆகியோர் கூறியதாவது மிக அதிக சக்தி வாய்ந் வெடிமருந்தை நக்சலைட்டுகள் பயன்படுத்தியுள்ளனர். காயமடைந்த 3 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களது நிலை தேறி வருகிறது. இறந்தவர்களின் உடல்கள் தேடி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. 16 பேரின் உடல்கள் ஜக்தல்பூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்றார். (8)

# N.C.A கல்வி நிறுவனம்

**சாரையடி- பருத்தித்துறை**

## DAY CLASS

**கலை, வர்த்தகம்**

**யாழ். முன்னணி ஆசிரியர்கள் பருத்தித்துறையில்**

பொருளியல் - திரு.உதயன்
கணக்கீடு - திரு. சயந்தன்
வணிகக்கல்வி-
யாழ். முன்னணிஆசிரியர்
அளவையியல்-திரு.பிரபானந்தன், திரு.அரவிந்தன் ,திரு.அகிலன்

தமிழ் - திரு. முகுந்தன்
இந்துநாகரிகம்-திரு.பிரதீபன்
புவியியல் - திரு.மயூரன்
கிறிஸ்தவநாகரிகம்- திரு.சுதா

**ஆரம்பம்- 14.09.2005**
**புதன் காலை 8 மணிக்கு**

(39606) (39-18-3)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை தியாகராஜா

(காமாட்சி கூல்பார் முன்னாள் உரிமையாளர்- திருநெல்வேலி)



தாவடி வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தியாகராஜா அவர்கள் நேற்று (05.09.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை- நல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் சுப்பிரமணியம் -சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெகஜோதியின் அன்புக் கணவரும் ஊர்மிளா (கனடா), ஸ்ரீஅனந்தன் (B.G. லொட்ஜ், கொழும்பு), பதுமநிதி (மாணவி யாழ்/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சர்வேஸ்வரனின் (கனடா) அன்பு மாமனாரும் யஸ்மினியின் (கனடா) பேரனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் பாக்கியலட்சுமி, சரஸ்வதி, நடராசா (பழமுதிர்ச் சோலை, முன்னாள் உரிமையாளர், நல்லூர்), ஆனந்தராசா (கணக்காளர், லண்டன்), மனோரஞ்சிதம், ரதிதேவி (யா/இணுவில் இந்துக் கல்லூரி, ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசலிங்கம் (கனடா), அருமைத்துரை, கண்மணி (பிரான்ஸ்), சின்னத்துரை,(நல்லூர், ப.நோ.கூ.சங்கம்), சுந்தரேஸ்வரி (மாம்பழம்), ஜீவகுமாரி (கணக்காளர், லண்டன்), யோகேந்திரன் (லிங்கஜன்ரேடர்ஸ், யாழ்ப்பாணம்), சிவகுமாரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், மாநகரசபை) ஆகியோரின் மைத்துனரும் ஜெகதீஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரனும் சதாசிவம் அன்னம்மாவின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2005) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

(39664) (39-18-34)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலைத் திட்டம்

வேலணைப் பிரதேசசபைஉள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 12ஆம் திகதி சுகாதாரமும் சுத்திகரிப்பும் என்னும் பொருளில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

மருத்துவ சேவை பெறமுடியாத மக்களை நாடி நடமாடும் மருத்துவ சேவை வழங்கும் முகமாக எதிர்வரும் 12ஆம், 17ஆம் திகதிகளில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி உப அலுவலக பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு ஆயுள்வேத மருத்துவ குழுவினர் மருத்துவ சேவை வழங்குவர். இதனைவிட வீதிகள், கிணறுகள் துப்புரவு செய்து குளோரின் இடப்படும்.

எதிர்வரும் 13ஆம் திகதி கல்வி, விளையாட்டுத் தொடர்பான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும். முன்பள்ளி மாணவர்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள், பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான பொது அறிவுப் போட்டி, கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் என்பன இடம் பெறும்.

எதிர்வரும் 14ஆம் திகதி சூழலைப் பேணக் கூடியவாறு மர நடுகையை மேற்கொள்ளல், கட்டாக்காலி நாய்களை அழித்தல், சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்துதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

எதிர்வரும் 15ஆம் திகதி அபிவிருத்தி தொடர்பான பதாதைகள், சனசமூக நிலையங்கள், மயானங்கள் என்பவற்றை புனரமைத்தல், சிரமதானம் செய்தல் என்பன மேற்கொள்ளப்படும் என்று வேலணைப் பிரதேசசபையின் செயலாளர் கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம் அறிவித்துள்ளார். (எ-204)

# மருந்தகம்
# இடம் மாற்றப்பட்டுள்ளது

பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெருவில் 25.08.2005 தொடக்கம் தற்காலிகமாக இயங்கிவந்த இலவச ஆயுள்வேத மத்திய மருந்தகம், 05.09.2005 திங்கட்கிழமை தொடக்கம் பருத்தித்துறை, புலோலி மத்தி, தம்பசெட்டி, சதாவதானி கதிரவேற்பிள்ளை வீதி, மாலங்கெணியிலுள்ள சுப்பிரமணியம் ஸ்ரீகாந்த் அன்பு இல்லத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

**நிர்வாகம்.**

விளம்பர அனுசரணை
**Dr.S.சசிகாந்த்**

(39650) (39-18-34)

# பாராட்டி
# வாழ்த்துகின்றோம்



*கிளிநொச்சியில் முன்னர் சேவையாற்றி மக்கள் மனதை வென்றெடுத்து தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டப் பெருநிலப்பரப்பு மக்கள் வங்கிகளின் பிரதேச முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று வந்திருக்கும்*

சேவையாளர் **உயர்திரு. க.ஆனந்தராசா** அவர்கள் இம்மண்ணுக்கும் மக்களுக்கும் மேலும் சேவைகள் பல புரிந்து உயர்வுகள் பல பெற்று நீண்ட காலம் சேவையாற்ற வாழ்த்துவோர்:

(C/45029)(11-19)

| | | | | |
|---|---|---|---|---|
| **திண்ணன்வேளான் பொருள்வாணிபம்** | **தங்கமீமா புடைவை வாணிபம்** | **பிள்ளையார் அருள் வண்ணச்சோலை** | **முருகன் துணை புடைவையகம்** | **செந்தூரன் களஞ்சியம்** |
| (சுபாஜினி ரேடர்ஸ்) | (சாந்தி ரெக்ஸ்ரைல்ஸ்) | யாழ்சாலை - கிளிநொச்சி | யாழ்சாலை - கிளிநொச்சி | (ரம்யா & மைதிலி களஞ்சியம்) மின்சார உபகரணங்கள் விற்பனையாளர், எம்.எம்.பி. கட்டடம் |
| யாழ்சாலை - கிளிநொச்சி | யாழ்சாலை - கிளிநொச்சி | T.P:-021-2285789 | T.P:-021-2285035 | கிளிநொச்சி- T.P:-021-2285113 |



நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற யதீசன் செல்வகுமாரின் மிருதங்க அரங்கேற்றத்தின் முதல் நிகழ்ச்சியாக வயலினிசை இடம்பெற்றது. லண்டனில் இருந்து வருகைதந்த செல்விகள் ரம்யா கிருபானந்தன், சிந்துஜா கிருபானந்தன் சகோதரிகள் வயலின் வாசிப்பதைக் காணலாம். (படம்: நல்லூர் செய்தியாளர்)

# காக்கைதீவு இந்துமயானம் அருகில் சுத்திகரிப்பு இயந்திரம்

யாழ்ப்பாணம், செப்.6


காக்கைதீவு இந்துமயானம் அருகில் 'கார்ப்' திட்டத்தின் கீழ் பாவனைக் கழிவுகளைச் சுத்திகரிக்கும் இயந்திரம் பொருத்தப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை நீர்வழங்கல் சுகாதாரத் திட்ட முகாமையாளர் எந்திரி ரி.பாரதிதாசன் மேற்கொண்டுள்ளார்.

வலி.தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபையும் வலி.தென்மேற்குப் பிரதேச செயலகமும் இதற்கான அரச காணியை வழங்க முன்வந்துள்ளன.

இதேவேளை-

காக்கைதீவில் அமைக்கப்படவுள்ள சுத்திகரிப்பு நிலையத் தொகுதி அமைப்புக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்கவுள்ளது. சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்படவுள்ள பகுதியை வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன், யாழ். நீர்வழங்கல் சுகாதார திட்ட முகாமையாளர் மற்றும் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர், தொழில்நுட்ப அலுவலர் ஆகியோர் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டனர். (எ-185)




## காலாவதியான பொருள்கள் அழிப்பு

தொல்புரம் பகுதியில் உள்ள பலசரக்குக் கடைகள் கடந்த வெள்ளியன்று திடீரென சுகாதாரப் பரிசோதகர்களால் முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டன. வட்டுக்கோட்டைப் பிரிவு சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட இந்த நடவடிக்கையின்போது மீட்கப்பட்ட காலாவதியான பிஸ்கெட்டுகள் மற்றும் பால்மா வகைகள் பின்னர் அழிக்கப்பட்டன. (எ-119)

# ஆழிப்பேரலை பாதித்த 167 மீனவருக்கு ரூ.68 லட்சம் செலவில் வலைகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

வடமராட்சி வடக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறு தொழில்களைப் புரியும் 167 கடற்றொழிலாளர்களுக்கு 68 லட்சம் ரூபா பெறுமதியர்ன சூடை வலைகள், அறக் கொட்டியான் வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

நோர்வே அரசு இந்த வலைகளை வழங்கியிருந்தது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட படகுகளைத் திருத்தும் நோர்வே அனுசரணையுடனான ஏ.ஜே.நிறுவனம் தும்பளையில் உள்ள அதன் படகு திருத்தும் நிலையத்தில் வைத்து இவற்றை வழங்கியது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சமாசத் தலைவர் டொன்பொஸ்கோ, உபதலைவர் எஸ்.தனபாலசிங்கம், ஏ.ஜே.நிறுவன வடக்கு-கிழக்கு இணைப்பாளர் கே. தர்மசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு இது வரை காலமும் படகுகள், வலைகள் உள்ளிட்ட எந்த ஓர் உதவிகளையும் பெறாத மீனவர்களுக்கும்-

சேதமடைந்த படகுகளை இதே நிறுவனத்தில் திருத்திய - மீன்பிடி வலைகளற்ற மீனவர்களுக்கும் -

இந்த அறக்கொட்டியான், சூடை வலைகள் வழங்கப்பட்டதாக சமாசச் செயலாளர் சூரியகுமார் தெரிவித்தார்.

வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் கீழுள்ள ஒன்பது கிளைச் சங்கங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கே இவ்வலைகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, மேலும் ஒரு தொகுதி மீன்பிடி வலைகள் வந்து சேர்ந்ததும் ஏற்கனவே தெரிவான 221 மீனவர்களில் மிகுதியான 44 மீனவர்களுக்கும் வலைகள் வழங்கப்படும் என ஏ.ஜே. நிறுவன வடக்கு - கிழக்கு இணைப்பாளர் கே.தர்மசீலன் தெரிவித்தார். (எ-173)

# வாய்ப்புற்று நோய் உருவாகுவதை ஆரம்பத்திலேயே தடுப்பது எப்படி?

## பணிப்பாளர் அலுவலகத்தில் கலந்துரையாடல் நடந்தது

யாழ்.மாவட்டத்தில் வாய்ப்புற்று நோய் உருவாகுவதை ஆரம்பக் கட்டத்திலேயே தடுப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிமுகக் கலந்துரையாடல் ஒன்று யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். ஜெயக்குமார் புற்றுநோய் தொடர்பாகவும் வாய்ப்புற்று நோய் தொடர்பாகவும் தடுப்பு முறைகள் தொடர்பாகவும் பங்குபற்றியோருக்கு விளக்கமளித்தார். இது தொடர்பான விவரணப் படங்களும் காண்பிக்கப்பட்டன.

இக் கலந்துரையாடலில் யாழ்.பிராந்திய பற்சிகிச்சை நிபுணர் எம்.டேவிட், மலேரியாத் தடுப்பு இயக்க பிராந்திய வைத்திய அதிகாரி டாக்டர் கே.ரி.சிவபாதம்,யாழ்.பிரதி மாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலக சுகாதாரக் கல்வி அதிகாரி எம்.தஜீகரன் மற்றும் அனைத்து பற்சிகிச்சை நிபுணர்கள், பாடசாலை பற்சிகிச்சையாளர்,சுகாதார வைத்திய அதிகாரிகள்,யாழ்.மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.மரியதாசன், யாழ்.மாநகர சபை கல்வி அதிகாரி, யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம். இராஜேந்திரா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கனடாவில் வசித்த காலஞ்சென்ற திருமதி யோகராணி சிறிகிருஷ்ணன் ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையுடன் நல வாழ்வு அபிவிருத்தி நிலையம் இக்கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மூலம் முன்னெடுத்தது. (எ-5)

# நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு மாணவரிடையில் விழிப்புணர்வுப் போட்டி

வலி.தெற்கு,செப்.6

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் 'சக்தி' அமைப்பினரால் உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

நல்லொழுக்கம் தொடர்பான அறிவினை மாணவர்கள் மத்தியில் வளர்ப்பதனூடாக நல்ல மனப்பாங்குகள், நல்ல வாழ்க்கை முறைகளை அவர்களிடையே தோற்றுவிக்கவும் -

மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட சந்தர்ப்பம் வழங்கும் நோக்குடனும் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, சித்திரப்போட்டி, கவிதைப்போட்டி (புதுக்கவிதை - மரபுக் கவிதை என்பன) போன்ற பல போட்டிகள் பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு, இடைநிலைப் பிரிவு, மேற்பிரிவு என்ற நான்கு நிலைகளில் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களுடன் பரிசுகளும் வழங்கப்படும்.

பாடசாலை மட்ட போட்டிகள் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் நடத்தப்பட்டு முடிவுகள் கோட்ட மட்ட போட்டிகளுக்கு அறிவிக்கப்படும். கோட்டமட்ட போட்டிகள் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெறும். (எ-152)

# கணனி கொள்வனவுக்கு லண்டன் வாசி நிதியுதவி

வலி.தென்.மேற்கு,செப்.6

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் விரைவில் ஆரம்பிக்க விருக்கும் இலவச கணனி பயிற்சி நெறிக்கு புதிய கணனிகள் இரண்டை கொள்வனவு செய்வதற்கும்

கணனிஅறைக்கு மின்சார இணைப்பு வழங்குவதற்குமென வட்டுக்கோட்டையை சேர்ந்தவரும், தற்போது லண்டனில் வசித்து வருவருமான நலன் விரும்பி ஒருவர் இரண்டு இலட்சத்து 25ஆயிரம் ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் மேற்படி கணனிப் பயிற்சி நெறி வட்டுக்கோட்டை சித்தன்கேணி வீதியிலுள்ள வட்டு.- தொண்டையம் தொழிற் பயிற்சி நிலையக் கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று கழகத் தலைவர் ச.கனகராசன்தெரிவித்தார்.

இப்பயிற்சி நெறியில் பாடசாலையை விட்டு விலகிய - படித்த - வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் மற்றும் யுவதிகள் பயிற்சி பெறுவதற்கு சேர்த்தக் கொள்ளப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

## கோயிலாமனை - மந்துவில் வீதி பலத்த சேதமடைந்த நிலையில்

தென்மராட்சி,செப்.6

மீசாலை வடக்கு கோயிலாமனை - மந்துவில் வீதி பலத்த சேதமடைந்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் படையினர் முகாம் இருந்த வேளையில் கனரக வாகனங்கள் போக்குவரத்து மேற்கொண்டதால் வீதி சிதைவடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதாகவும் -

தற்போது பாரஊர்திகள் இவ்வீதியைப் பயன்படுத்துவதால் விரைவில் மணல் பாதையாக மாறும் அபாயம் உள்ளது என்றும் - பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வீதியைத் திருத்தித் தருமாறு உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டும் இதுவரை பயன்கிடைக்கவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## ஊர்காவற்றுறையில் அபிவிருத்தித் திட்டங்கள்

ஊர்காவற்றுறை,செப்.6

இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஊர்காவற்றுறையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன்படி முன்பள்ளி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்கு ஒரு லட்சம் ரூபாவும், கரம்பன் மேற்கு இந்து மயான மண்டபம் அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும், ஊர்காவற்றுறை அண்ணா சனசமூக நிலையத்திற்கு மலசலகூடம் அமைப்பதற்கு 30 ஆயிரம் ரூபாவும், கரம்பன் கண்ணகை அம்மன் வீதி செப்பனிடுவதற்கு இரண்டு லட்சத்து ஐயாயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வேலைகளை விரைவில் நிறைவேற்றிமுடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் ஏ.கணேசானந்தராஜா தெரிவித்தார். (எ-16)



பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்கென, அபிவிருத்திச் சபையால் நடத்தப்பட்ட கொடி வாரத்தின்போது அபிவிருத்திச் சபையின் உப தலைவர் லயன் கே.தணிகாசலத்துக்கு யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் கொடியை வழங்கி விற்பனையை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் அபிவிருத்திச் சபைச் செயலாளர் வி.ஜி. தங்கவேல் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: வடமராட்சிச் செய்தியாளர்).

# நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விஸ்தரிப்பு ஆரம்பம்

நல்லூர்,செப்.6

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. நெடுந்தீவு மத்தி சிக்கிரியான் பள்ளத்தில் இருந்து நெழுவினி பிள்ளையார் கோயில் வரை மின்சார விஸ்தரிப்பு இடம்பெறும் எனவும் -

நெடுந்தீவு மத்தியிலுள்ள மின்பிறப்பாக்கி மூலமே மேற்குப் பகுதிக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

முதலில் நெடுந்தீவு மேற்குப் பகுதி மின் விநியோகத்திற்கென தனியான மின்பிறப்பாக்கி பொருத்தப்படும் என்றும் -

மேற்குப் பகுதிக்கான மின்சார விஸ்தரிப்புக்கு மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியில் ரூபா 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் - முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. (எ-111)

# தொழில் உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

வலிமேற்கு,செப்.6

ஐ.ஓ.எம். நிறுவனத்தினர் இந்தியாவிலிருந்து திரும்பி மீளக்குடியமர்ந்த வருமானம் குறைந்த குடும் பங்களுக்கு தொழில் உபகரணங்களை வழங்கவுள்ளனர்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்று பின்னர் மீளக் குடியமர்ந்துள்ள வருமானம் குறைந்த - சுயதொழிலை மேற்கொள்கின்ற குடும்பங்களுக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

இதுவரை உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களை உடனடியாக தம்முடன் தொடர்புகொள்ளுமாறு ஐ.ஓ.எம். நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (எ-175)


# மரண அறிவித்தல்

## எங்கள் குடும்பத் தலைவர்

# நாகமுத்து பரராஜசிங்கம்

## (திருகோணமலை முன்னாள் வர்த்தகர்)

## இறைபதம் எய்தினார்



எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.09.2005) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காகக் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய் யப்படும் என்பதனைத் தெரியப்படுத்துகின்றோம். இதனை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம்.

தகவல்: **மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

21, ஆனைக்கோட்டை வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
T.P. 077 6201567

(C/45040)(22-11-14)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள் கலைமுதற்தேர்வு 2002 & 2003
## பரீட்சை மண்டபங்கள் தொடர்பான அறிவித்தல்

மேற்படி பரீட்சையில் இந்து நாகரிகம், தமிழ், இரண்டாம் மொழியாக ஆங்கிலம் (E.S.L.) ஆகிய பாட அலகுகளிற்கு தோற்றும் பரீட்சார்த்திகள் கீழ் குறிப்பிடப்படும் மண்டபங்களில் பின்வரும் சுட்டிலக்க ஒழுங்கில் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

| திகதி | நேரம் | பாட அலகு | பரீட்சை மண்டபம் | சுட்டிலக்கம் |
|---|---|---|---|---|
| 10.09.2005 | 09.30 - 12.30 | EX.HC.1.1 | ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, கோப்பாய் | 10320002 தொடக்கம் 10321158 வரை |
| சனிக்கிழமை | 01.30 - 04.30 | EX.HC.1.2 | இராமநாதன் மண்டபம், யாழ்.பல்கலைக்கழகம் | 10220003 " 10220709 " |
| | | (இந்து நாகரிகம்) | முகாமைத்துவமண்டபம் III யாழ்.பல்கலைக்கழகம் | 10220715 " 10221024 " |
| | | | சிற்றுண்டிச்சாலை மண்டபம் யாழ்.பல்கலைக்கழகம். | 10120002 " 10120689 " |
| | | | முகாமைத்துவ மண்டபம் IIIயாழ்.பல்கலைக்கழகம் | 10020052 " 10020663 " |
| | | | முகாமைத்துவ மண்டபம் IIIயாழ்.பல்கலைக்கழகம் | 96055 " 99903 " |
| 11.09.2005 | 09.30 - 12.30 | EX.T.1.1 | ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய். | 10320002 தொடக்கம் 10321158 வரை |
| (ஞாயிற்றுக்கிழமை) | 01.30 - 04.30 | EX.T.1.2 | முகாமைத்துவ மண்டபம் IIIயாழ்.பல்கலைக்கழகம் | 10220003 " 10220752 " |
| | | (தமிழ்) | இராமநாதன் மண்டபம் - யாழ்.பல்கலைக்கழகம் | 10220754 " 10221074 " |
| | | | " " " " | I0120002 " 10120690 " |
| | | | " " " " | I0020020 " 10020664 " |
| | | | " " " " | 94233 " 99903 " |
| 17.09.2005 | 09.30 - 12.30 | EX.ESL.1.0 | ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் | 10320002 தொடக்கம் 10321158 வரை |
| (சனிக்கிழமை) | | (ஆங்கிலம்) | முகாமைத்துவ மண்டபம் III யாழ்.பல்கலைக்கழகம் | 10220003 " 10220539 " |
| | | | முகாமைத்துவ மண்டபம் II யாழ்.பல்கலைக்கழகம் | 10220541 " 10221024 " |
| | | | இராமநாதன் மண்டபம் - யாழ்.பல்கலைக்கழகம் | 10120003 " 10120700 " |
| | | | சிற்றுண்டிச்சாலை மண்டபம்- யாழ்.பல்கலைக்கழகம் | 10110002 " 10110011 " |
| | | | " " " " | I0020012 " 10020828 " |
| | | | " " " " | I0010003 " 10010078 " |
| | | | வணிகத்துறை மண்டபம் I&II யாழ்.பல்கலைக்கழகம் | 91173 " 99903 " |

மேலதிக விவரங்களுக்கு 0212223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

பதிவாளர். (சி-45043)

# ஜே.வி.பி. மீதான திருமலை தாக்குதல்: மற்றுமொரு தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு,செப்.6

ஜே.வி.பியின் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்ய எத்தனித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மற்றொரு தமிழர் தம்பலகாமத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 7ஆம் திகதி கந்தளாய் நகரில் அமைந்துள்ள ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தின் மீது இனந்தெரியாதநபர்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலீஸ் சார்ஜண்ட் ஒருவர் படுகாயமுற்றார்.

இந்தத் தாக்குதலையடுத்து கந்தளாயைச் சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மேற்படி தாக்குதல் இடம்பெற்ற சமயம் கந்தளாய் ஜே.வி.பி. அலுவலகத்தினுள் ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகர இருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட தம்பலகாமத்தைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை மாதவன் என்பவரின் வீட்டிலேயே ஜே.வி.பியின் அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் தங்கியிருந்தனர் என சந்தேகிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்டவர்கள் திருமலை நீதிமன்றில் இன்று அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

(ஐ-க)


**நியூ றோயல் அக்கடமி**

சங்கத்தானை

A/L DAY CLASS

தமிழ் - சிவமுகுந்தன்
இ.நாகரிகம், இ.சமயம் - வை.பிரதீபன்
வரலாறு - திரு.சுஜிகரன்
புவியியல் - திரு.கிரிதரன்
அளவையியல் - திரு.அரவிந்தன்
அரசியல் - பொன்.சந்துரு
ஆங்கிலம் - BRITTO
நாடகமும் அரங்கியலும் - திரு.கார்த்திகேயன்
பொருளியல் - திரு.மதீஸ்
கணக்கீடு - திரு.செந்தூரன்

ஆரம்பம்: 12.09.2005 திங்கள் 9.00 A.M.(O.T)

(39622)(17)



**மாவை. கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்**

**விநாயகர் சதுர்த்தி உற்சவம்**

நாளை (7-9-2005) புதன்கிழமை முற்பகல் 6 மணிக்கு விநாயகர் சதுர்த்தி அபிசேகம் திருவிழா நடைபெறும். காலை 9 மணிக்கு தெல்லிப்பழைத் தடைமுகாமுக்கு வரவும். ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்படும். அன்னதானம் நடைபெறும். (39675)

-அறங்காவலர்.



**உலகத் தமிழர் இணைய வானொலி**

**அறிவிப்பாளர் நேர்முகப் பரீட்சை**

30.08.2005 உதயனில் வெளியிடப்பட்ட விளம்பரத்துக்கு அமைய விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை (07.09.2005) புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் 12.30 மணிவரை இலக்கம் 12, சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்துக் கல்லூரி அருகில்) என்ற முகவரியில் உள்ள உதயன் விருந்தினர் விடுதியில் நடைபெறும். தொ.பே.222 2330

விண்ணப்பித்தவர்களும் பயிற்சிபெற ஆர்வமுள்ளோரும் குறித்த நேரத்தில் சமுகமளிக்கவும்.

(39669) இணைப்பாளர், உலகத் தமிழர் வானொலி.


**கண்ணீர் அஞ்சலி**



யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கச் சமாசம் புங்குடுதீவு நயினாதீவு பல நோ. கூ. சங்கம் ஆகியவற்றின் தலைவர் திரு.ப.கனகலிங்கம் அவர்களின் அன்புத் தந்தை

**நாகமுத்து பரராசசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்கின்றோம்.

நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம், நெடுந்தீவு (சி-45046) தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

**கண்ணீர் சொரிகிறோம்**



தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகத்தின் ஸ்தாபகர் திரு.ப.கனகலிங்கம் அவர்களது அருமைத் தந்தை

**நா.பரராசசிங்கம்**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரிற்கு எம் ஆழ்ந்த அனுதாபங்கள்.

தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகம், வேலணை.

(39676)


**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்

**இங்கிலீஸ்காரன்**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(சி-43363)

**மனோகரா** யாழ்ப்பாணம்

ஜெயம் ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த

**தாஸ்**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.

அடுத்த வெளியீடு: சிம்பு, கோபிகா நடித்த

**தொட்டி ஜெயா**

(சி-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ் நடித்த

**அந்நியன்** (ரீவ்ஸ்) (டொல்பி ஒலியமைப்பு)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.).

**ராஜா** யாழ்ப்பாணம்

சுரேஸ்கோபி நடித்த

**பத்ரம்**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)

(சி-43380)


**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**



மனோகரன் யசோதரா தம்பதியரின் செல்வப் புதல்வன்

**வினோஜனன்**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (06.09.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கரவெட்டி மேற்கு, V.A.M. அன்னை இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, அப்பா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டன், பாட்டி, அப்பம்மா, மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார், மச்சான்மார், வெளிநாட்டில், உள்நாட்டில் இருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வன் வினோஜெனனை நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

T.P.: 0777 118960
0773 222852.

வீ.ஏ.எம். எஞ்ஜினியரிங், யாழ்.வீதி, நெல்லியடி.

(39674) (29-17-12-15)

உ

நாளை (07.09.2005) புதன்கிழமை சுழிபுரம் - பறாளாய்

# ஈசுர விநாயகரின் பாற்காவடித் தினம்

இதுவரை நடந்த தமிழன் விடுதலைப் போராட்டத்தின் பெறுபேற்றைப் பெற்றிட நாளைய பாற்காவடிகள் பலன் அளிக்கட்டும்.

சோழியூரன் - பிறைசூடிக்குரு.

(39670)

# செங்கலடியில் நேற்றுமாலை இராணுவத்தினர் மீது தாக்குதல்

## சிப்பாய் பலி; மற்றொருவர் காயம்!

செங்கலடி பொதுச்சந்தைப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று திங்கட்கிழமை மாலை இனந்தெரியாத நபர்கள் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

மாலை 5 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. கொம்மாந்துறை இராணுவமுகாமில் கடமையாற்றும் ஹெட்டிபொல பிரதேசத்தை வசிப்பிடமாகக்கொண்ட பொம்படி பண்டார (வயது - 35) என்பவரே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார். சடலம் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொதுச்சந்தையை அண்டிய பகுதியில் மூன்று இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தபோது அவர்கள்மீது கைக்குண்டு வீசப்பட்டுள்ளதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்து செங்கலடிப் பிரதேசத்தில் பெரும் பதற்றம் நிலவியது. வர்த்தக நிலையங்கள் யாவும் உடனடியாக இழுத்துமூடப்பட்டன. மேலதிக இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சுமார் ஒரு மணிநேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது. (ஐ-13-க)

## பொலீஸ் நிலையங்களின் மீது அம்பாறையில் நேற்றிரவு தாக்கு

அம்பாறையில் நேற்றிரவு இரு இடங்களில் பொலீஸ் நிலையங்கள் தாக்கப்படுள்ளன எனினும், ஆள்களுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

கல்முனை - அம்பாறை வீதியில் அமைந்துள்ள சம்பாந்துறை பொலீஸ் நிலையம் இரவு 7.30 மணியளவில் தாக்கப்பட்டது. இரண்டு கிரனேட்டுக்களை வீசிய இனந்தெரியாத நபர்கள் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகமும் செய்துள்ளனர்.

இரவு 8.45 மணியளவில் மருதமுனை பொலீஸ் நிலையம்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையம் மட்டக்களப்பு - கல்முனை வீதியில் அமைந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் பொலீஸ் நிலையம் சிறுசேதங்களுக்கு உள்ளானது. எனினும் ஆள்களுக்குப்பாதிப்பு ஏதுமேற்படவில்லை. (ஐ-க-13)

## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கே மு.கா. ஆதரவு

கொழும்பு, செப். 6

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினக் கட்சிகளின் ஆதரவு யாருக்கு என்ற விடயம் முக்கியத்துவம் பெற்றுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துவிட்டது என்று நம்பகமாகத் தெரிகின்றது. இதுதொடர்பாக இரு கட்சிகளுக்கும் இடையில் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் செய்துகொள்ளப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பது என்று கட்சியின் உச்சபீடம் கூடி இதற்கான முடிவுகளை எடுத்துவிட்டது என்று தெரிகின்றது.

அதேசமயம், முஸ்லிம்களுக்கென நிலத்தொடர்பற்ற தனி நிர்வாக அலகு, சமாதானப் பேச்சுகளில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றையும் இரு கட்சிகளும் செய்து கொள்ளவுள்ளன. மிக விரைவில் அந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும் என்று தெரிகின்றது. கடந்த பொதுத் தேர்தலிலும் இத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை இரு கட்சிகளும் செய்து கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பற்றி ஆராயும் விசேட செயலமர்வு ஒன்று கொழும்பு. கிரான்ட்பாஸில் உள்ள சுகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹோட்டலில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம், கட்சியின் உச்சபீட உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். செயலமர்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் அமைப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற விடயம் முக்கியமாக அலசி ஆராயப்படும். அத்துடன், கட்சித் தலைமையின் முடிவும் தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-க)

## மஹிந்த மீதான குற்றச்சாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனப் பிரதமர் மீது பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

பலத்த சர்ச்சை - வாதப் பிரதிவாதங்கள் - ஆகியவற்றின் பின்னர் இந்த நிதியை மீண்டும் பிரதமர் அலுவலகக் கணக்குக்கு மாற்றுவதற்கு பிரதமர் நடவடிக்கை எடுத்தார். எனினும் இடைப்பட்ட இந்தக் காலத்தில் அரச நிதி தவறான முறையில் கையாளப்பட்டதான குற்றச்சாட்டு தொடர்ந்து கூறப்படுகின்றது.

இந்த ஊழல் குறித்து உரிய விசாரணை நடத்தும்படி பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இந்தப் பின்னணியிலேயே இவ்விவகாரம் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் மூன்று பேர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

பத்து நாள்களுக்குள் இந்த விவகாரம் குறித்து விசாரணை செய்து தமக்கு அறிக்கை மற்றும் சிபாரிசுகளை வழங்கும்படி ஆணைக்குழுவை ஜனாதிபதி சந்திரிகா வேண்டுவார் எனவும் கூறப்படுகின்றது.

அத்தகைய விசாரணை ஒன்றில் ஊழல் குற்றவாளியாகக் காணப்படும் ஒருவர் அரசமைப்பின் 89, 90, 91, 92 ஆம் உறுப்புரைகளின்படி தேர்தல் ஒன்றில் (ஜனாதிபதித் தேர்தல் உட்பட) தேருநராக (Elector) இருக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, மேற்படி விசாரணை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் விவகாரத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குற்றவாளியாக ஆணைக்குழுவினால் காணப்படுவாரேயானால் அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது கேள்விக்குள்ளாகும் எனக் கூறப்படுகின்றது.

உத்தேச ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குத் தலைவராக உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர். ரஞ்சித் வீரரத்ன நியமிக்கப்படலாம் என ஒரு தகவல் தெரிவித்தது.

## தங்காலையில் ஐ.தே.கவினர் ஆர்ப்பாட்டம்

அம்பலாந்தோட்டை, செப். 6

தங்காலை நகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் பி.வி.ஜி.நிவ்டனின் வீட்டின் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்தும் -

இந்தத் தாக்குதல் குறித்து உடனடியாகத் துரித விசாரணைகளை நடத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியும் -

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் நேற்று தங்காலை பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெத ஆராய்ச்சி, முன்னாள் தென்பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் ஆனந்த குலரத்ன, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். கறுப்புப்பட்டிகளை அணிந்துகொண்டு, அரசுக்கு எதிரான பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-க)

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து பிரதமருடன் இ.தொ.கா.பேச்சு

கொழும்பு, செப்.6

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரையும் நேற்று சந்திக்கத் திட்டமிட்டிருந்தபோதும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மட்டுமே சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவையா அல்லது ஸ்ரீ.ல.சு.கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவையா ஆதரிப்பது என்பதை இ.தொ.கா. இன்று தீர்மானிக்கும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இ.தொ.கா. தலைவரும் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பு ஒரு மரியாதைக்கான சந்திப்பு எனக் கூறப்பட்டபோதும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான இ.தொ.காவின் கோரிக்கைகள் நேற்றே பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட் டன எனவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, எதிர்க்கட்சித்தலைவரும் ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுக் காலை 11 மணிக்கு இ.தொ.காவினர் சந்திக்கத் திட்டமிடப்பட்டிருந்தனர் எனினும், இந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை.

வழமையாக இ.தொ.கா. தலைமையகமான சௌமியபவனில் நடைபெறும் இத்தகையஅதியுயர் கூட்டம் நேற்று கொட்டக்குளி பிரதீபா மண்டபத்தில் நடைபெற்றது. இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தலைமையில் நடைபெற்ற இந்த அதிஉயர் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களுடன் கட்சியின் தேசியசபை உறுப்பினர்களுமாக 200 பேர் கலந்துகொண்டனர்.

கட்சிக்குள் ஒரு சாரார் ஐ.தே.காவை ஆதரிக்கவேண்டும் எனவும் மற்றும் ஒருசாரார் இப்பொழுது அரசுடன் சேர்ந்து இருப்பதால் பிரதமரை ஆதரிக்கவேண்டும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. எனினும், இத்தகவல் கிடைக்கும்வரை இறுதிமுடிவு எடுக்கப்படவில்லை. கூட்டம் இன்றும் நடைபெறும்.

இ.தொ.காவின் இறுதி முடிவு இன்று அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமானால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என இ.தொ.கா. பிரமுகர் ஒருவர் 'உதயனு'க்குத் தெரிவித்தார். (ஐ-க)

### ஐ.நா. பிரதிநிதி பேரியலுடன் பேச்சு

இலங்கையின் தற்போதைய அரசியல் கள நிலைவரம் குறித்து அறிவதற்காக கொழும்பு வந்துள்ள, ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி பிரேஹ்மி நேற்று 'நுஆ' கட்சித் தலைவரும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப்பைச் சந்தித்துப்பேசினார். பேரியலின் அமைச்சில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

முஸ்லிம்களின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து பேரியல் விளக்கினார். அதே நேரம், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்வது குறித்த விடயத்தில் சர்வதேச சமூகம் போதிய அக்கறை எடுப்பதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-க)

## ஐ.நா.செயலரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் செயற்பாடுகளில் அதிருப்தி உள்ளபோதும் அவர்களை மாற்றுவதற்கு இது சந்தர்ப்பமல்ல. புதிய ஜனாதிபதியொருவர் தெரிவானவுடன் அவர் இதைப்பற்றி சிந்தித்து நடவடிக்கை எடுக்கலாம். எப்படியாயினும் தற்போது கொழும்பில் தங்கியுள்ள ஐ.நா. 'விசேட பிரதிநிதி பிரேஹ்மியுடன் ஜே.வி.பி. இன்று அதைப்பற்றி விரிவாக ஆராயும்.

- இவ்வாறு ரில்வின் சில்வா மேலும் கூறினார். (ஐ-க)

## பிரதமர் - ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருடன் ஜே.வி.பியினர் நடத்திய பேச்சுகளில் காணப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பாக உத்தியோகபூர்வமான ஆவணம் ஒன்றில் கைச்சாத்திடவேண்டும் என ஜே.வி.பி. விடுத்த கோரிக்கைக்கு அமையவே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

இருதரப்பினரும் எதிர்வரும் வியாழனன்று இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளனர் என பிரதமருக்கு நெருங்கிய வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது. (ஐ-க)

## கலாசார அலுவலர்க்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சகல கலாசார உத்தியோகத்தர்களையும் இன்று காலை 10 மணிக்கு யாழ். பிரதேச செயலகத்திற்கு சமூகமளிக்குமாறு வடக்கு - கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-13)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸின்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை திருகோணமலை நகரை அண்டிய பகுதியில் உள்ள மாரியம்மன் கோவில் அருகே கிரனேட் ஒன்று வெடித்தது. இந்த குண்டு வெடிப்பில் எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

கிரனேட் வெடித்ததை அடுத்து மாரியம்மன் கோவிலைச் சூழவுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது கோவிலுக்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று கிரனேட்டுக்களும், ரி-56ரக துப்பாக்கி ஒன்றும் அதற்குறிய இரண்டு மகஸின்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. எனினும், எவரும் கைதுசெய்யப்படவில்லை எனத் திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-க)


வரவேற்பாளர் உடன் தேவை

வரவேற்பாளர் உடன் தேவை (ஆண்கள் மட்டும்) யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் மும்மொழிகளிலும் தேர்ச்சியுடையவர்களுக்கும் இப்பணியில் அனுபவமுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.தகைமைச் சான்றிதழ்களுடன் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/45037)(17)

புலமைப் பரிசில் வகுப்பு - 2006

இவ்வருடம் தரம்-4 கற்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வகுப்பு

பிரிவு-2
ஆரம்பம்- 07.09.2005
புதன்-3.00 மணி

★ ஒவ்வொரு பிரிவிலும் 40 மாணவர்கள் மட்டும் அனுமதி.
★ ஞாயிறுதோறும் புலமைப் பரிசில் மாதிரிப்பரீட்சை நடைபெறும். (39630)

தரம்-1 முதல் O/L வரை நடைபெறுகின்றன.

நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.

'உள்ளத் தனைய துயர்வு'

நாக.தமிழிந்திரன்

(39628)

Paper class | Day class

எதிர்பாருங்கள்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.